ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 9	விக்ருதி ௵ சித்திரை ௴	ஸஞ்சிகை 4

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

———— :: ————

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபாதபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா பூத்யா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ நரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(9-ம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

சேஷியும் நியந்தாவுமான பரமாத்மாவை 'நான்' என்று ஜீவாத்மா நிரந்தரம் ஐக்யாநுஸந்தான யோகங்கள் செய்வதுதான் பக்தி யோக மென்று கூறுவது பேத மதத்திற்குப் பொருந்துமோ வெனில்—"பரமாத்மா ஜீவாத்மா வென்னும் ப்ரத்யகாத்மாவுக்கு உயிர். அந்த விச்வ உயிரைக்குறித்து உயிரெனப் படும் தானும் உடல் போன்றவனே. அவனாலே உயிர்ப்பிக்கப் படுகிறவனே யொழிய, அவனல்லால் அவனைப் பிரிந்து ஜீவிக்கக்கூடியவ னல்லன் என்பதை நிச்சயமாய்த் தெளிவித்து த்ருடப்படுத்தவே" என்று பூமாதிகரண பாஷ்யத்திலும் பொருள் உரைக்கப்பட்டது. 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' 'தத் த்வமஸி' என்ற உபநிஷத் வாக்யங்களும் அதில் சேர்ந்ததே. "ப்ரஹ்மத்தை உபாஸிப்பவன், அதைத் தன்னினும் வேறான வஸ்துவாக உபாஸிப்பதா, அல்லது தான் என்றா, என்று இரண்டு பக்ஷங்களையும் காட்டிவிட்டு, 'அந்யச்சேத்' (ஜீவனிலும் வேறாக) என்ற பூர்வ பக்ஷத்தை உபந்யஸித்து, ஜீவனைக்காட்டிலும் ப்ரஹ்மம் வேறென்று இதுவரையில் ஸூத்ரகாரர் தீர்மானித்திருப்பதால், உள்ளபடி உபாஸித்தால்தான் மோக்ஷங் கிடைக்கு மானதால் (தன்னிலும்) வேறென்றேதான் த்யாநம் செய்யவேண்டு மென்று பூர்வ பக்ஷத் தீர்மானத்தைக் காட்டிவிட்டு, உபாஸ்ய தைவம் உபாஸிக்கிறவனுடைய ஆத்மா என்றே உபாஸிக்கவேணும்; உபாஸகனுடைய ஸ்வயம் உயிரற்ற உடலுக்கு உபாஸகன் எப்படி உயிர்தரும் உயிரோ, அப்படியே தனக்கும் உயிரான பரமாத்மா தன்னுள்ளிருந்து உயிர் தரும் அந்தர்யாமியான 'ஒருயிரேயோ உலகங்கட் கெல்லாம்' என்ற விச்வ ப்ராண னென்றும் தன்னாலேயே ஸத்தா ஸ்திதி ஜ்ஞாநம் ஆநந்தம் பெறு முடல்போல அத்யந்த தததீந னென்னும் நினைவோடு 'நானே நீ,' 'நின்னலா லிலேன்காண்' 'என்னை நீதந் தாக்கினையே' என்ற ஆத்ம ஜ்ஞாநத்தோடு, 'நீயே நான், நானே நீ' என்று அஹங்க்ரஹாநுஸந்தாநத்தோடு, உபாஸிக்கவேணு மென்று தீர்மானிக்கப்பட்டது. உள்ளது உள்ளபடி அறிந்து நித்யம் அநுஸந்தித்தால் தானே தாத்விகமாய் உபாஸித்தபடி ஸ்வாபாவிக நிலையான மோக்ஷம் ஸித்திக்கும். 21 தரம் உலகங்களில் அங்கங்கே உயிராய் (அந்தராத்மாவாய்) நிற்பவனும் ஜீவ ஸ்வரூபமான உனக்குள்ளும் அந்தர்யாமியாய் உயிராய் நின்று நியமிப்பவனுமான அவனுக்கு ஜீவாத்மாவான நீ சரீரம் போன்றவனே' என்று ஓதப்பட்டது.

இப்படி தத்வ ஸ்திதி என்று தெளிந்தபோது உண்மைக்கு விரோதமாக உபாஸித்தால் மோக்ஷ ஸித்தி இராது. '[illegible]' என்று

மேலே அதிகப்படியாகக் கூறுவது, இந்த அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் 21 தரம் 'அவன் உனக்கு ஆத்மா (அந்தர்யாமி உயிர்;) நீ உயிராயினும் அவனால் ஸத்தை முதலியவற்றைப் பெறுபவனே; நீ அவனை உத்தேசித்து உடல் போன்றவனே' என்று உத்தாலகரை யாஜ்ஞ்யவல்க்யர் க்ரஹணம் செய்விக்கும் ப்ரமாணத்தைக் காட்டுகிறது. 'ஆத்மா என்றே உவமூஹி ஆத்மா என்று அநுஸந்திக்கிறார்கள்; அதனால் ஆத்மா என்று உபாஸிக்கவேணு'மென்று ஸூத்ரத்தின் முதல் பாகம் 'ஃவம்வா அஹமஸ்மி பகவோ தேவதே அஹம்வை ஃவமஸி' என்கிற ச்ருதியைக் காட்டி, 'ஆத்மா' தான் என்று உபாஸிக்கவேணு மென்று கூறிற்று. உபாஸிப்பவர்கள் இப்படி அநுஸந்தித்து உபாஸிக்கிறார் கள். 'உவமூஹி-உவாஸதே' என்று ஸூத்ர முதல் பாகத்தின் பொருள். 'ஞாதா' என்றே ஈச்வரனை உபாஸிக்கவேணும். 'ஃவம்வா அஹமஸ்மி ஹமவொ தெவதெஅஹம் வெஃவமஸி' என்று ஜாபாலர்களுடையவும், 'அஹம்ப்ரஹ்மாஸ்மி' என்று சிலருடையவும் (வாஜஸநேயிகளுடையவும்) ஞாதவோபவமநங்கள்" என்று ஸ்ரீ சாங்கர பாஷ்யம். இந்த ச்ருதிகள் இரண்டாத்மாக்களையும் ஸமா நாதிகரணமாகப் பேசும் ச்ருதிகள். 'ஃவம் அஹமஸ்மி' என்பதின் பொருள், 'ஃவம்' சப்தத்தின் விஷயனான பரமாத்மாவே அஹம் சப்த புத்தி விஷயன்' 'அஹம்வெஃவமஸி' என்பதின் பொருள், அஹம் ஶப்தபுத்திவிஷயனாவ ஃவம்ஶப்த புத்தி விஷயः' என்று III-3-37 ச்ருதப்ரகாசிகையும், 'அஹம்ப்ரஹ்மாஸ்மி' என்பதற்கு 'நான் ப்ரஹ்மாத்மகனாய் இருக்கிறேன்; என்னை சரீரமாக வுடையது ப்ரஹ்மம்' என்று உபநிஷத் பாஷ்யத்திலும் பொருள் கூறுவதைப் பிறர் ஒவ்வார். நமக்கே ஸம்சய முண்டாவது ஸஹஜம். இந்த வாக்யங்களை மட்டும் பார்த்தால் சப்த ஸ்வரஸப் பொரு ளென்று ஆர்ஜவத்தோடு உறுதி கூற முடியாது. "யதக்ஷே ஸ்யாமஹம் ஃவம் ஃவம் வா அஹம் ஸ்யா: ஸ்யுஷ்டே ஸத்யா உஹாஶிஷः" என்று ஓர் அக்நியைக் கூப்பிட்டுக் கூறும் ச்ருதியை இந்த வாக்யப் பொருள் விசாரிக்கு மிடங்க ளெல்லாம் வ்யாகரண ப்ரயோக விஷயத்தில் ச்ருதப்ரகாசிகையிலும், உபநிஷத் பாஷ்யத்திலும் உதாஹரிக்கப்பட் டது. 'அக்நி பகவானே! நான் நீராய் இருந்தேனேயானால், அல்லது நீர் நானாக இருந்தீரேயாயினும், உம்முடைய ஆசீர்வாதோக்திக ளெல்லாம் உண்மையாக நிறைவேறிவிடும்' என்று பொருள். அங்கே, 'அஹம்' என் பது அக்நி பரிசர்யை செய்பவனே. 'ஃவம்' என்பது கூப்பிடப்படும் அக்நியே. அக்நி நம்மைப்போல் ஓர் ஜீவாத்மா. அவருக்கு நாம் உடலல்ல. அவர் நமக்கு உயிரு மல்ல. அங்கே 'உடன்மிசை உயிரென' என்ற நித்ய மான உடலுயிர் ஸம்பந்தத்தை யிட்டுப் பொருள் கூற இடமில்லை. 'ஃவம்வா அஹமஸி' என்பதற்குப் பொரு ளுரைக்கையில் ஸ்ரீ சாங்கர பாஷ்யம் III-3-37-ல் வ்யதிஹார ஸூத்ரத்தில், 'நீரே நான், நானே நீர்' என்று இரு தரம் இரண்டு க்ரமமாகப் பரிவர்த்தனையாக திருப்பித் திருப்பி ஐகாத்ம்யத்தை (ஐக்யத்தைப்) படித்துளது. 'மனதை ப்ரஹ்ம மென்று உபாஸி' 'நாமத்தை ப்ரஹ்ம மென்று உபாஸி' என்பதுபோல இங்கே 'இதி' (என்று) என்ற பேச்சு இல்லை; உள்ளபடியான உபாஸனையாகும். 'இப்படி உபாஸிப்பதால் இருவருக்கும் ஐக்யம் வந்துவிடுமே, தத்க்ரதுந்யாயம் ஐக்யத்தைக்

கொடுக்குமே' என்ருல், 'நாம் வேண்டா மென்பவ ரல்ல. ஏகத்வத்தை த்ருடீகரிப்பது எமக்கு இஷ்டமே' என்று கூறிற்று. இப்படி 'நானே நீ, நீயே நான்' என்று பேசியிருப்பதாலேயே 'நின்னலா லிலேன்காண்' என்று ஆழ்வார் 'நானே நீ' என்று தாம் உபநிஷத்தின் சாயையாகப் பாடி அதற்குப் பொருளுரைத்தபடி, 'நான்' என்பதின் ஸ்திதியே பரப்ரஹ்மாயத்தம்; நான் என்பது அவனலால் ஏது என்று பொருளுரை கூடுவதே. ஸூத்ரத்தின் முதல் பாகத்தி லெடுத்த ஐக்ய விஷயமான 'த்வம்வாஅஹம்' ச்ருதியில் இருவருக்கும் ஸ்வரூபைக்யம் கூறப்படுகிறதா? உயிரு முடலான 'உயிர் வேறின்றி ஒருயிராய்' என்று ஆழ்வார் தெளிவிக்கும் பிரிக்கமுடியாத ஐக்யம் கூறப்படுகிறதா? என்று ஸந்தேஹம் இருக்கக்கூடியதைத் திரும்பவும் திரும்பவும் 'உத்தாலகரே! ஒவ்வொன்றுக்கும் ப்ரஹ்மம் அந்தர்யாமியான உயிர். உம்முடைய சுத்த ஜீவ ஸ்வரூபத்திற்கும் அவர் உயிர். அவரில்லாமல் நீர் தனிமையில் இருக்கக்கூடியவரே யில்லை. "ஏஷ த ஆத்மா அந்தர்யாம்யம்ருத:" என்று 21-தரம் க்ராஹிக்கச் செய்யும் உபநிஷத்தை 'ஆத்மேதி க்ராஹயந்தி ச' என்று வாஜஸநேயகர்கள் பலகால் செய்து உறுதி யுபதேசத்தை மேலே எடுத்துக் காட்டுவதால் தெளிவிக்கிருர். 'ஆத்மேதி தூபகச்சந்தி, ஆத்மேதி க்ராஹயந்தி ச' என்று ஸூத்ராந்வயம். முன் பாகத்தில் 'ஆத்மா' என்று கூறியதும் 'த்வம் வா அஹமஸ்மி' என்கிற இங்கே முன் பாகத்திலே ஒப்புக்கொள்ளப்படும் விஷய வாக்யத்திலுள்ள 'அஹம்' என்பதற்கு 'ஆத்மா' என்று ஸூத்ரகாரர் பொருளைத் தெளிவிப்பதாயும் கொள்ளலாம். 'அஹம் என்ற இந்த ஜாபால ச்ருதி பதம் அந்தர்யாமி ஆத்மாவைச் சொல்லுகிறது' என்று ஸூத்ரகாரர் வ்யாக்யாநம் செய்துகொடுக்கிருர். 'ஆத்மா இதி' என்பதால் இந்த விஷய வாக்யத்தைக் காட்டுவதற்கு 'அஹம்' என்று ஸூத்ரத்தில் பத விந்யாஸம் செய்யலாம். இந்த ச்ருதியிலும், 'யோஹமஸ்மி, அஹம் ப்ரஹ்மாஹமஸ்மி' என்கிற ச்ருதிகளிலும் 'அஹம்' பதமே யுள்ளது; 'ஆத்ம' பத மில்லை. இந்த மூன்று ச்ருதிகளுக்கும் இங்கே ஸூத்ரகாரர் ச்ருதியிலுள்ள 'அஹம்' பத ஸ்தாநத்தில் அதன் பொருளை 'ஆத்மா' 'அந்தர்யாமீ' என்று 21-தரம் படித்த அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் க்ரஹணம் செய்விப்பதற்காக நிவேசநம் செய்கிருர். 'ஆத்மா' என்பதற்கு ஸ்வயமாகவே 'உள்ளேயிருந்து உடலை நியமித்து உயிருள்ளதுபோலச் செய்து நியமிப்பது' என்பது பொருள். ஆனல் ஸ்வரூபம் என்ற பொருளு முளது. அதுவும் ஸ்வரஸ மென்றே நினைக்கலாம். 'அநேந ஜீவேநாத்மநா' என்பதற்கு 'ஆத்மா எனும் ஸ்வரூபமாகிய என்னல்' என்றும் உபநிஷத் பாஷ்யம் பொருளுரைத்தது. 'ஆத்மா ஹி நாம ஸ்வரூபம்' என்று ஈக்ஷத்யதிகரண ஶாங்கர பாஷ்யம். இந்த ஆத்ம பதம் 'ஏஷ த ஆத்மா அந்தர்யாம்யம்ருத:' என்று 21-தரம் படிக்கப்பட்ட உபதேச நிகமந கண்ட வாக்யங்களை ஸூசிப்பதாலும் கூடவே 'அந்தர்யாமீ அம்ருத:' என்கிற பதங்களையும் உபலக்ஷண முறையாக இழுத்துக் கொண்டு வந்து வேதாந்த உயிர்ப் பொருளை ஸஞ்ஜீவநம் செய்வதையும் ஸூசிக்கும். 'ஆத்மா' என்பதற்கு ஸ்வரூபம் என்று பொருள் சொன்னலும், 'நீ யல்ல உனக்கு ஸ்வரூபம்; ப்ரஹ்மம்தான் உனக்கு ஸ்வரூபம். அது

உன்னுயிராய் உன் ஆத்மாவாய் இல்லாவிடில் நீ ம்ருதனே. உன்னை அந்த அம்ருதன்தான் உள்ளிருந்து பூர்ணம் செய்து ஸத்தாக்கி ஸப்ராணனாகச் செய்பவன். நீ வ்யபகத ப்ராணனாக ம்ருதனாக ஆகாமல் உன்னை உயிருள்ளவனாகச் செய்யும் அம்ருத ஸஞ்ஜீவி அவன்' என்று அந்தர்யாமி ப்ராஹ்மணம் பல்கால் 'ஸ த ஆத்மாம்ருத:' என்று படிப்பதால் விளக்குகிறார். 'என்னுயிர்' என்று ஆழ்வார் அநுஸந்தாநம். 'ஆத்மதா' என்று ஶாண்டில்யர். 'என்னுயிர் தந்தளித்தவரை' என்பதையும் நினைக்கவேணும். 'ஸ த ஆத்மா' அவன் உன் ஸ்வரூபம். அவனின்றி நீ யேது? எப்படி அவன் என் ஸ்வரூபமாவான்? 'ஸ த ஆத்மாந்தர்யாமீ' உன்னை உள்ளேயிருந்து ஒரு பூர்ண வஸ்துவாக்குவதினால்தான். 'ஆத்மாந்தர்யாமிவிசிஷ்டஸ்ய வசந:' 'ஆத்மாந்தர்யாமிவிசிஷ்டஸ்ய ஸ:' நீ ப்ருதக்காய் உளனே அல்ல. அந்தர்யாமியாயிருந்து உன்னை ம்ருதனாகாமல் காப்பாற்றுகிறான் என்பதை, 'ஸ த ஆத்மாம்ருத:' என்று விளக்குகிறது. 'ஆத்மாந்தர்யாமீ' என்பது மத்யமணியாக (நடுநாயகமாக) இரு புறத்திலும் அந்வயிக்கிறது. அந்தர்யாமியானதால் உன் ஸ்வரூபம் உன் ஆத்மா. அந்தர்யாமியான ப்ராணனானதால் உன்னை ஸப்ராணனாக (அம்ருதனாக)ச் செய்யும் ஸஞ்ஜீவ நௌஷதி. இத்தனை ரஸங்களையும் இங்கே ஸூத்ரக்காரரும், அவர் இரண்டு ஸூத்ர கண்டங்களாலும் காட்டப்படும் ச்ருதிகளும் வ்யஞ்ஜநம் செய்கின்றன. 'ஶாரீரகம்' என்று தம் அரும் பெரும் சாஸ்த்ரத்தின் பெயருக்கு உயிர் தருகிறார். ஆநந்தமயாதிகரணத்தில் ப்ரஹ்ம ஹேதுகமான பேராநந்தத்தை விளக்கினார். இங்கே ப்ரஹ்ம ஹேதுகமான ஸத்தை முதலியதை (உயிரைத்) தருகிறார். அங்கே 'கம்' என்கிற ஆநந்த ப்ரதத்வ பூர்த்தியும், இங்கே 'உளனாக' 'உயிருள்ளவனாக'ச் செய்யும் ப்ரஹ்மத்தோடு பிரியாத (பிரிக்க முடியாத) அப்ருதக் ஸித்தமான உயிர் நிலையையும் விளக்குகிறார்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஹிந்து மதம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான், ஸ்ரீரங்கம்]

கீழே சொல்லியபடி இவ் வுலகவாழ்க்கையி லுள்ள பேதை, பாலகனதாகும் பிணி பசி மூப்புத் துன்பங்களைக் கண்ணாக் கண்டு, இவ்வுலக வாழ்க்கையில் ஆசையில்லாது பரலோகத்துப் பேரின்பங்களை ஶாஸ்த்ரங்களின் மூலமாகக் கேட்டு அப்பேரின்பங்களில் ஆசையோடிருப்பவர்கள் ஹிந்துக்கள் என்று சொல்கிற பக்ஷத்தில், இவ்வுகத்திலிருக்கும் ஸாங்க்ய மதம் ஜைந மதம் முதலிய வேறு மத க்ரந்தங்களிலும் இவ்வுலக வாழ்க்கையி லுள்ள தோஷங்களும் பரலோகத்து ஸுகங்களும் சொல்லப்படுவதாலும், அந்தந்த மதஸ்தர்களான மனிதர்களும் இவ்வுலக வாழ்க்கையில் வைராக்யத்தோடு பரலோக

ஸுகாநுபவ ஹேதுக்களாக அந்தந்த மதங்களில் சொல்லப்படும் உபாயங்களை அநுஷ்டிப்பதையும் நாம் பார்த்து வருவதால் அவர்களையும் ஹிந்துக்கள் என்று சொல்ல வேண்டுமே என்று ஒரு ஸந்தேஹம் உண்டாகலாம்.

இந்தப் பரத கண்டத்தில் அநாதி காலமாக ஹிந்து மதமான வைதிக மதமே இருந்ததாகவும், ஜைந மதம் ஸாங்க்ய மதம் புத்த மதம் போன்ற மற்றை மதங்கள் ஹிந்து மதத்தில் பிறந்த மனிதர்களினால் புதிதாக உபதேசிக்கப் பட்டவைகளாகவும், பாகவதம் முதலிய ஹிந்து மத க்ரந்தங்களில் சொல்லப்படு கிறபடியினால், ஹிந்து மத க்ரந்தங்களில் சொல்லப்பட்ட சில விஷயங்கள் மற்றை மதங்களில் சொல்லப்படுவதும், அவைகளை அம்மதத்தினர்கள் அநுஷ் டிப்பதும் விருத்தமாகாது. அவைகளில் சிலவற்றை இங்கு உதாஹரிக்கிறோம்.

ஸ்ரீ பாகவதம் 3-ம் ஸ்கந்தம், 24ம் அத்யாயத்தில், கர்த்தம மஹர்ஷிக் கும் அவர் தர்ம பத்நீயான தேவஹூதிக்கும் புத்ரனாகப் பிறந்த கபில மஹர்ஷி ஸாங்க்ய மதத்தை உண்டுபண்ணி உபதேசித்ததாக வ்யக்தமாகச் சொல்லப்படு கிறது. கபில மஹர்ஷியால் சொல்லப்பட்ட ஸாங்க்ய மதம் வேத விருத்த மென்று ஸ்ரீ ஶங்கராசார்யர் ஸ்ரீ பாஷ்யகாரர்களால் ஸூத்ர பாஷ்யங்களில் தூஷிக்கப்படுவதாலும், கபில மதத்தில் ஈச்வரனை அங்கீகரிக்கவில்லை யென்று பாஷ்யங்களில் சொல்லுகிறதாலும், கபிலர் தேவஹூதிக்குப் பகவத்பக்தியை உபதேசிப்பதாலும், ஸாங்க்ய காரிகையில் ஈச்வரனை அங்கீகரித்ததாகச் சொல் லாததனாலும், வைதிகர்களால் தூஷிக்கப்படுகிற ஸாங்க்ய மதம் வேறொன்றைக் கபிலர் செய்திருக்கவேணு மென்று நிச்சயிக்கவேண்டியதாக இருக்கிறது.

ஸ்ரீ பாகவதம் ஐந்தாம் ஸ்கந்தம், ஆறாம் அத்யாயத்தில், ரிஷபதேவ னுடைய சரித்ரத்தில் அவனுடைய யோகாப்யாஸத்தைச் சொல்லுமிடத்தில், ரிஷபதேவனுடைய வர்ணாச்ரம விருத்தமான ஆசாரத்தைக் கேட்டு அர்ஹன் என்ற கொங்கண தேசத்தரசன் அந்த ஆசாரங்களைத் தான் அநுஷ்டித்துக் கொண்டு கலியுகத்தில் அவனுடைய துரத்ருஷ்டத்தினால் மோஹித்து, ஸர்வ பயங்களையும் நாசம் பண்ணக்கூடிய வைதிக தர்மங்களையெல்லாம் விட்டு, ப்ரமாண மில்லாத கெட்ட மார்க்கமான பாஷண்ட மதத்தை மனிதர்களுக்கு உபதேசிக்கப்போகிறான். அதைக் கேட்டுக் கலியின் கொடுமையினால் புத்தியில் லாத மனிதர்கள் வைதிக மதத்தில் சொல்லப்படும் ஸ்நாநாசமந சுத்தி முதலான அநுஷ்டாநங்கள் எல்லாவற்றையும் விட்டு, வேதம் ப்ராஹ்மணன் ஸர்வேச் வரன் இவர்களைத் தூஷித்துக்கொண்டு, தலை மயிரைப் பிடுங்குவது முதலான ஆசாரங்களைச் செய்துகொண்டு நரகத்தில் விழப்போகிறார்கள் என்று எழுதி யிருக்கிறது. இங்கு அர்ஹன் என்கிற பெயர் ஜைந மத தெய்வத்தின் பெய ராகையினாலும், தலை மயிரைப் பிடுங்குவது அந்த மதத்தின் ஆசார மாகையினா லும், ஷை மதம் ஜைந மத மென்று வ்யாக்யாநத்தில் சொல்லப்படுகிறது.

பரதன் என்கிற அரசனுடைய குமாரனான ஸுமதி என்பவன் ரிஷப தேவனுடைய விபரீத யோகத்தை அநுஷ்டித்துக்கொண்டிருந்தா னென்றும்;

அந்த அரசனே மஹா பாபங்களுக்கிருப்பிடமான கலியுகத்தில் சில பாஷண்டிகள் வேதத்தில் சொல்லப்படாத ஓர் தேவதையாகக் கல்பிக்கப்போகிறார்க ளென்றும், ஷெ 5-ம் ஸ்கந்தம், 15-ம் அத்யாயத்தில் சொல்லிருக்கிறது. இந்த ஸுமதி என்பவன் புத்தனுகக் கல்பிக்கப்பட்டதாக வீராகவியத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆக, இவ்வாறு பல மதங்கள் அநாதியான வைதிக மதமான ஹிந்து மதத்திலிருந்தே உண்டானதாகத் தெரிகிறபடியினுல், வைதிக மதத்தில் சொல்லப்படும் சில விஷயங்கள் அந்த மதத்தில் பிறந்தவர்களினுல் சொல்லப்படும் வேறு மதங்களில் கலந்திருக்கலாம். ஆகவே இதுவரையில் சொல்லியபடி, நமது வைதிக மதஸ்தர்களாய் இவ்வுலக வாழ்க்கையில் ஆசையில்லாது பரலோகத்துப் பேரின்பத்தில் ஆசையுள்ளவர்கள் ஹிந்துக்க ளாவார்கள் என்று சொன்னது அநுசித மாகாது. எனவே இதுவரையில் ஹிந்து என்கிற சப்தத்தினுடைய அர்த்தம் நிரூபிக்கப்பட்டது.

இனி மத சப்தத்தின் பொருளேயும் குறிப்பிடுவோம். மதம் என்றால் அபிப்ராயத்தினுல் தீர்மானிக்கப்பட்ட விஷயத்தைச் சொல்லுகிறது. அதாவது: தேஹத்தைக் காட்டிலும் நான் என்று தோன்றுகிற ஆத்மா வேறுபட்டவனென்றும், தேஹ ஸ்வபாவத்திற்கு விபரீதமாய் அவன் நித்யனுய், அறிவுள்ளவனுய், தான்தனக்குத் தோன்றுமவனுய், தேஹத்தினுடைய தோஷ மில்லாதவனுய், விகார மில்லாதவனுய், லோகாந்தரங்களுக்குப் போய்க் கர்மாநுகுணமான ஸுக துக்கங்களே அநுபவிக்க யோக்ய னென்று தெரிந்துகொண்டு, இந்த மநுஷ்ய சரீரம் அந்த ஆத்மாவை ரக்ஷிப்பதற்காகவே ஏற்பட்டதென்றும் தெரிந்துகொண்டு, அவ்வாத்மா பரலோகத்தில் கஷ்டப்படுவதற்குக் காரணங்களான கார்யங்களே விட்டுப் பரலோகத்தில் ஸுகமாக இருப்பதற்கு அநுகூலமான காரியங்களேயே முக்யமாக அநுஷ்டித்துக்கொண்டு, அதற்கு விரோதமில்லாதபடி இவ்வுலக வாழ்க்கை யின்பங்களே அநுபவித்திருக்கவேணு மென்பதும் இவ்விஷயங்களேத் தெரிவிக்கும் சாஸ்த்ரங்களில் பூர்ணமான நம்பிக்கையோ டிருக்கவேணும் என்பதும்தான் இங்குத் தீர்மானிக்கப்பட்ட விஷயம்.

இப்படி அநாதி காலமாக இந்தப் பரத கண்டத்தி லிருந்துவருகிற ஹிந்து மதத்திற்கு இக்காலத்தில் ஸம்பவித்திருக்கிற துர்த்தசையை முக்யமாகப் புத்திமான்கள் கவனிக்கும்பொருட்டுத் தெரிவிக்கிறேம். நமது தேசத்திற்கு வந்தேறிகளான அந்ய மதஸ்தர்களால் நமது ஹிந்து மதம் அழிக்கப்படாதபடி ரக்ஷிப்பதற்காகத் தாங்கள் அரும்பாடு படுவதாகத் தங்களேச் சொல்லிக்கொள்ளுகிற இக்காலத்துப் புத்திமான்கள் சிலர், இவ்வுலக வாழ்க்கையில் ப்ரத்யக்ஷ ஸித்தங்களான சிற்றின்பங்களேயே மனிதனுக்கு முக்யமான ப்ரயோஜநமாகத் தங்கள் மனத்தில் தீர்மானித்துக்கொண்டு, ஹிந்துமத க்ரந்தங்களில் பரலோகத்துப் பேரின்பங்களுக்கு ஸாதநங்களாகச் சொல்லப்பட்டிருக்கும் தர்மங்களில் நம்பிக்கை யில்லாததினுல் அவைகளேத் தம்தம் இஷ்டப்படி அநாதரித்தும், வேறு விதங்களாக மாற்றியும் வருகிருர்கள். அந்ய மதஸ்தர்களால் ஹிந்து மதம் அழிக்கப்படாதபடி தாங்கள் அதை ரக்ஷிப்பதாகச் சொல்லுகிறவர்கள், தாங்களே அம்மதாசாரங்களே அழித்துவிட்டால், இவர்கள் ஹிந்து மதத்துக்கு

ரக்ஷகர்களாக இருக்க முடியுமா? ஹிந்து மதாசாரங்கள் அந்ய மதஸ்தர்களினல் அழிக்கப்பட்டாலும், ஹிந்து ஜனங்களினலேயே அழிக்கப்பட்டாலும், அது நாசமடைந்து போகிறதுதானே.

இது இங்ஙனமிருக்க, ஹிந்து மத க்ரந்தங்களில் எது நமது தேச க்ஷேமத்திற்குக் காரணமாகச் சொல்லப்படுகிறதோ, அதை இவர்கள் தேச க்ஷேமத்திற்கு விரோதி என்கிருர்கள்.

"𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌮𑍁𑌖𑌬𑌾𑌹𑍂𑌰𑍁𑌪𑌾𑌦𑌤𑌃 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌂 𑌵𑍈𑌶𑍍𑌯𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌂 𑌚 𑌨𑌿𑌰𑌵𑌰𑍍𑌤𑌯𑌤𑍍 ॥"

[மநு ஸ்ம்ருதி முதல் அத். 31-ம் ச்லோ.]

[ப்ரஹ்மாவானவர் உலகம் வ்ருத்தியடைவதின் பொருட்டு ப்ராஹ்மணன் முதலாக நான்கு ஜாதி மனிதர்களை, முகம், தோள், துடை, கால் இந்த அங்கங்களிலிருந்து ஸ்ருஷ்டித்தார்.]

"𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌗𑍁𑌪𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌸 𑌮𑌹𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃 ।
𑌮𑍁𑌖𑌬𑌾𑌹𑍂𑌰𑍁𑌪𑌜𑍍𑌜𑌾𑌨𑌾𑌂 𑌪𑍃𑌥𑌕𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍍 ॥"

[ஷை, ஷை, 87-ம் ச்லோ.]

[அந்த ப்ரஹ்மாவானவர் இந்த உலகத்தை ரக்ஷிக்கவேண்டியதற்காக ப்ராஹ்மணன் முதலான நாலு ஜாதி ஜனங்களுக்கும் வெவ்வேறு காரியங்களை அவரவர்கள் செய்யவேண்டியவைகளாக ஏற்படுத்தினர்.] இவ்விரண்டு ச்லோகங்களிலும் ப்ராஹ்மணன் முதலான நான்கு ஜாதி பேதங்களை உலகம் நன்ருக வ்ருத்தி யடைவதற்காக ப்ரஹ்மா ஸ்ருஷ்டித்ததாகவும், இவ்வுலகங்களை ரக்ஷிப்பதற்காகவே நான்கு ஜாதிகளுக்கும் வேறு வேறு காரியங்களை உண்டாக்கினதாகவும் வ்யக்தமாக ஏற்படுகிறது. இப்படியிருக்க, இக்காலத்திய நம் தேசத்துப் புத்திமான்களோ வென்ருல், ப்ராஹ்மணுதி ஜாதி பேதங்களும் அந்தந்த ஜாதிகளுக்குக் கார்ய பேதங்களும் நம் தேச க்ஷேமத்திற்கு விருத்தமென்று சொல்லுகிருர்கள்.

"𑌯𑌤𑍍𑌰 𑌤𑍍𑌵𑍇𑌤𑍇 𑌪𑌰𑌿𑌧𑍍𑌵𑌂𑌸𑌾𑌃 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌵𑌰𑍍𑌣𑌦𑍂𑌷𑌕𑌾𑌃 ।
𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌿𑌕𑍈𑌸𑍍𑌸𑌹 𑌤𑌦𑍍𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌂 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌮𑍇𑌵 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ॥"

[மநு ஸ்ம்ருதி 10-ம் அத். 61-ம் ச்லோ.]

[எந்த ராஜ்யத்தில் ஒரு ஜாதி புருஷனும் மற்ருெரு ஜாதி ஸ்த்ரீயும் சேர்ந்து குழந்தைகள் உண்டாகின்றனவோ, அந்த ராஜ்யமானது ராஜ்யத்திலிருக்கும் ஜனங்களோடு சீக்ரமாக நாசத்தை யடையும்.]

ஒரு மனிதன் தன் பத்நீ யல்லாத மற்ருெரு ஸ்த்ரீயோடு சேருவதால் ஜாதிகள் கலந்து வர்ண ஸாங்கர்யம் ஏற்படுகிறது. அப்படி ஒரு ஜாதி மற்ருெரு ஜாதியுடன் கலந்துபோவதினல் உண்டாகிற பாபமானது ஸர்வ ஜனங்களையும் நாசம் பண்ணிவிடுமென்று

“ 𑌤𑌤𑍍𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑍋 𑌹𑌿 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌵𑌰𑍍𑌣𑌸𑌙𑍍𑌕𑌰𑌃 ।
𑌯𑍇𑌨 𑌮𑍂𑌲𑌹𑌰𑍋𑌽𑌧𑌰𑍍𑌮𑌃 𑌸𑌰𑍍𑌵𑌨𑌾𑌶𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇 ॥ ”

என்கிற மநு ஸம்ருதி 8-ம் அத். 353-ம் ச்லோகம் சொல்லுகிறது. பாரதம் அநுசாஸந பர்வம் உமா சிவ ஸம்வாதத்தில்

‘ 𑌯𑌦𑍀𑌹𑍈𑌕𑌵𑌰𑍍𑌣𑌂 𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌜𑌗𑌦𑍇𑌤𑌦𑍍𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ’

[இந்த உலகம் நான்கு ஜாதி பேதங்களோடு இருக்காமல் ஒரே ஜாதியாக இருக்குமானால் உலகம் நாசத்தை யடையும்] என்றிருக்கிறது.

இப்படியிருக்கிற ஹிந்து மத க்ரந்த வசநங்களை இக்காலத்து ஹிந்து மதத்தினர்களான புத்திமான்கள் தெரிந்து கொள்ளாததினாலோ, அல்லது இந்த ஹிந்து சாஸ்த்ரங்களில் நம்பிக்கை யில்லாததினாலோ, இந்தியாவில் ஜாதி பேதங்கள் ஒழிந்து ஒரே ஜாதியாக இந்தத் தேசம் ஆனால்தான் உலகத்திற்கு க்ஷேமம் என்று உபதேசிக்கிறார்கள். அதோடு அதை அங்கீகரிக்காதவர்களைப் பலபடியாக இந்த விபரீதத்தை அங்கீகரிக்கும்படி நிர்ப்பந்தமும் செய்கிறார்களே!

இதைப்போலவே பாரதம் அநுஶாஸந பர்வத்தில், ஸந்யாஸாச்ரமத்தை யுடைய ஸுலபா என்கிற ப்ராஹ்மண ஸ்த்ரீ யோகாப்யாஸ சக்தியினால் ஜநக மஹாராஜனுடைய சரீரத்தில் கண்ணுக்குத் தெரியாது கலந்திருக்க, அவளைப் பார்த்து அவ்வரசன்,

“ 𑌵𑌰𑍍𑌣𑌪𑍍𑌰𑌵𑌰𑌮𑍁𑌖𑍍𑌯𑌾𑌸𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍀 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌹𑌮𑍍 ।
𑌨𑌾𑌵𑌯𑍋𑌰𑍇𑌕𑌯𑍋𑌗𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌮𑌾 𑌕𑍃𑌥𑌾 𑌵𑌰𑍍𑌣𑌸𑌙𑍍𑌕𑌰𑌮𑍍 ॥ ”

[நீ ஒரு ப்ராஹ்மண ஸ்த்ரீ; நான் க்ஷத்ரியன்; நாமிருவரும் சேர்ந்திருக்கக் கூடாது. ஜாதிக் கலப்பு என்கிற பாப கார்யத்தை நீ பண்ணக்கூடாது] என்கிறான்.

“ 𑌵𑌰𑍍𑌤𑌸𑍇 𑌮𑍋𑌕𑍍𑌷𑌧𑌰𑍍𑌮𑍇𑌷𑍁 𑌗𑌾𑌰𑍍𑌹𑌸𑍍𑌥𑍍𑌯𑍇 𑌤𑍍𑌵𑌹𑌮𑌾𑌶𑍍𑌰𑌮𑍇 ।
𑌅𑌯𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌸𑍁𑌕𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌶𑍍𑌰𑌮𑌸𑌙𑍍𑌕𑌰𑌃 ॥

[நீ ஸந்யாஸாச்ரமத்தி லிருக்கிறாய்; நான் க்ரஹஸ்தாச்ரமத்தி லிருக்கிறேன்; ஸந்யாஸாச்ரமத்தி லிருக்கிற நீ க்ருஹஸ்தாச்ரமத்தோடு கலந்திருப்பது பெரிய பாபம்] என்கிறான்.

“ 𑌸𑌗𑍋𑌤𑍍𑌰𑌾𑌽𑌸𑌗𑍋𑌤𑍍𑌰𑌾𑌂 𑌵𑌾 𑌨𑌵𑍇𑌦 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌨𑌵𑍇𑌤𑍍𑌥 𑌮𑌾𑌮𑍍 ।
𑌸𑌗𑍋𑌤𑍍𑌰𑌮𑌾𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇 𑌤𑍃𑌤𑍀𑌯𑍋 𑌗𑍋𑌤𑍍𑌰𑌸𑌙𑍍𑌕𑌰𑌃 ॥ ”

[உன்னுடைய கோத்ரமும் என்னுடைய கோத்ரமும் ஒன்றோ அல்லது வேறானதோ அது எனக்கும் தெரியாது; உனக்கும் தெரியாது. ஆனால் என்னுடைய கோத்ரமும் உன்னுடைய கோத்ரமும் ஒன்றாக இருந்துவிட்டால், ஸகோத்ரனான என்னோடு கலந்திருக்கும் உனக்கு கோத்ர ஸாங்கர்யத்தினால் உண்டான பாபம் வரும்]

" 𑌅𑌯𑌜𑍀𑌵𑌤𑌿 𑌤𑍇 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌪𑍍𑌰𑍋𑌷𑌿𑌤𑍋 𑌵𑌾 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌅𑌨𑍍𑌯𑍋 𑌵𑌾 𑌸𑌹𑌾𑌯𑍇𑌤𑌿 𑌅𑌤𑌸𑍍𑌤𑍇 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌸𑌜𑍍𑌜𑌨𑌃 ॥ "

[உன்னுடைய பர்த்தா ஜீவித்திருக்கிருனே அல்லது இறந்து விட்டானே? அந்ய ஸ்த்ரீயோடு ஸம்பந்தம் மஹா பாபத்தை உண்டாக்கும்.]

" 𑌪𑌾𑌪𑌾𑌨𑍍𑌯𑍇𑌤𑌾𑌨𑍍𑌯𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑍍𑌯𑍇𑌵 𑌕𑌰𑍋𑌷𑍍𑌯𑌸𑌿 ।
𑌅𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌵𑌾𑌯𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑍇𑌨 𑌵𑌾 𑌪𑍁𑌨𑌃 ॥ "

[பண்ணக்கூடாத இந்தப் பாப கார்யங்களை அறிவின்மையாலோ ப்ரமத்தினாலோ ஏதோ கார்யத்தைக் குறித்து நீ செய்கிருய்.] இப்படி, ஜாதி ஸாங்கர்யம் கோத்ர ஸாங்கர்யம் முதலியவைகளைப் பாப மென்று ஜநக ராஜன் சொல்லு கிருன். இவையெல்லா மொருபுற மிருக்க, நமது புத்திமான்களால் இரவும் பகலும் படிக்கப்படுகிற பகவத் கீதையிலும்,

" 𑌸𑌙𑍍𑌕𑌰𑍋 𑌨𑌰𑌕𑌾𑌯𑍈𑌵 𑌕𑍁𑌲𑌘𑍍𑌨𑌾𑌨𑌾𑌂 𑌕𑍁𑌲𑌸𑍍𑌯 𑌚 ।
𑌪𑌤𑌨𑍍𑌤𑌿 𑌪𑌿𑌤𑌰𑍋 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌲𑍁𑌪𑍍𑌤𑌪𑌿𑌣𑍍𑌡𑍋𑌦𑌕𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ॥ "

என்று ஜாதி ஸாங்கர்யத்தை உண்டாக்குகிறவனுக்கும் உண்டாக்கப்பட்ட குலத்திற்கும் நரகம் வந்தேதீரு மென்றும், அவர்களுடைய பித்ருக்களுக்கும் மஹத்தான கஷ்டம் ஸம்பவிக்கு மென்றும் சொல்லியிருப்பதை இவர்கள் கவனிக்கக்கூடாதா? இப்படி இவ்வுலகத்தில் ச்ரமப்பட்டு ஸம்பாதித்த ராஜ்யத்தின் நாசத்தையும் பிறகு நாகாநுபவத்தையும் கொடுக்கிறதாக ஹிந்து மத க்ரந்தங்களில் சொல்லுகிற வசநங்களில் நம்பிக்கையில்லை யென்று சொன்னால் அவர்கள் எப்படி ஹிந்துக்க ளாவார்கள் ?

" 𑌵𑌰𑌂 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍋 𑌵𑌿𑌗𑍁𑌣𑌃 𑌨 𑌪𑌾𑌰𑌕𑍍𑌯𑌃 𑌸𑍍𑌵𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 ।
𑌪𑌰𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌜𑍀𑌵𑌨𑍍 𑌹𑌿 𑌸𑌦𑍍𑌯𑌃 𑌪𑌤𑌤𑌿 𑌜𑌾𑌤𑌿𑌤𑌃 ॥

[மநு ஸ்ம். 10-ம் அத். 97-ம் ச்லோ.]

[ஒரு ஜாதியில் பிறந்த மனிதன் வேறு ஜாதி தர்மத்தை ஸம்பூர்ணமாக அநுஷ்டிப் பதைக் காட்டிலும், தன் ஜாதி தர்மத்தைக் கொஞ்சம் குறைவாக அநுஷ்டிப் பதே உத்தமமாகும். எவன் பரதர்மத்தினல் ஜீவிக்கிருனே அவன் பதிதன்; பாதகியாகிருன்.] இந்த விஷயம் '𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍋 𑌵𑌿𑌗𑍁𑌣𑌃 𑌪𑌰𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌤𑍍' என்கிற கீதா ச்லோகத்திலும் சொல்லப்படுவதாக ஶங்கர பாஷ்யம்.

" 𑌪𑌰𑌧𑌰𑍍𑌮𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌃 𑌸𑍁𑌰𑍂𑌪𑌪𑌰𑌦𑌾𑌰𑌵𑌤𑍍 ।
𑌯𑌤𑍋 𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌸𑍍𑌯 𑌹𑌨𑍍𑌤𑌾𑌽𑌸𑍌 𑌯𑌥𑌾 𑌵𑌹𑍍𑌨𑍇𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌜𑌲𑌮𑍍 ॥ "

[அத்ரி ஸ்ம்ருதி]

[எந்த ராஜ்யத்தில் மனிதர்கள் ஸ்வஜாதி தர்மங்களை விட்டு வேறு ஜாதி தர்மங் களை அநுஷ்டிக்கிருர்களோ அந்த விபரீத தர்மாநுஷ்டாநமானது ஜலம் நெருப்பை நாசம் பண்ணுவதுபோல் அந்த ராஜ்யத்தை நாசம் பண்ணிவிடும்] என்றிருக்கிறது.

இப்படி, நான்கு ஜாதிகளில் ஒன்ருேடு மற்ருெரு ஜாதி கலந்து போகிறதான வர்ண ஸாங்கர்யம் நமது தேசத்தையும் நாசம் பண்ணி, ஜாதி கலந்து போகும்படி செய்கிறவர்களுக்கு நகரத்தையும் கொடுக்கு மென்றும், ஒரு ஜாதி தர்மத்தை மற்ருெரு ஜாதி மனிதன் செய்வதும் ராஜ்ய நாசத்தை விளைவிக்கு மென்றும், நமது ஹிந்து மத க்ரந்தங்களில் சொல்லுகிறபடியினுல், நமது தேசத்திற்கு அநுகூல கார்யத்திற்காக ச்ரமப்படுகிற புத்திமான்கள் நம் தேசத்திற்கு நாசத்தை விளைவிக்கும் கார்யங்களில் ப்ரவர்த்திப்பது மிகவும் உசிதமாகா தென்பதைத் தெரிவிக்கிருேம். [தொடரும்]

ஸ்ரீ :

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

உபய வேதாந்த ஐககண்ட்யம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

மோக்ஷ க்ஷணத்தில் ஸம்ப்ரஸாத னென்னும் சுத்த ஜீவ ஸ்வரூபம் பரஞ்ஜ்யோதி என்னும் பரமாத்மாவில் உபஸம்பந்நமாகித் தன் ஸ்வம்மான ரூபத்தை அடைகிருனென்று தஹர ப்ரஜாபதி வித்யைகள் ஓதுகின்றன. அஜ்ஞாநம் போகாமல் ஸம்ஸாரியாகவே யிருக்கும் தசையில் நித்ரா காலத்தில் ஸத் என்னும் ப்ரஹ்மத்தினிடத்தில் ஸம்பந்நனுைலும், ப்ரியமான பார்யை தன் ப்ரிய காந்தனை அணைவதுபோல் கருணையாலும் ப்ரேமையாலும் 'ஸம்பரிஷ்வக்த:' என்றபடி மிகவும் கெட்டியாய்ச் சேர்த்தணைத்து மெய்ம் மறக்கும்படிக்கும் ச்ரமங்கள் போகும்படிக்கும் பரன் கேவல க்ருபையால் அணைவதைக் காட்டி, பகவானுடைய அத்யந்த ப்ரேமையையும் கருணையையும் வாத்ஸல்யத்தையும் ஸத்வித்யாதி ச்ருதிகள் விளக்குகின்றன. இப்படி நிநேதிநே திரும்பவும் திரும்பவும் தன்னுடைய ஸஹஜப்ரீதி க்ருபைகளை நிர்வ்யாஜமாக ப்ரகாசப்படுத்துவதை ச்ருதி காட்டி, இப்படி நாம் அபேக்ஷிக்காமலேயே வலுவில் நம்மிடம் பிதாவைப் போலும் மாதாவைப்போலும் ப்ரிய பத்நியைப்போலும் நம்மைச் சேர்த்துக் கொண்டு அகலாமலிருக்கவேண்டு மென்கிற தீவ்ரமான ஆசையைக் காட்டிக் கொண்டே யிருக்கிறவன் நம்மை அவன் ரக்ஷித்து மோக்ஷ மென்னும் அவனது பிரியாச் சேர்த்தியைத் தரவேண்டு மென்று நாம் அபேக்ஷித்துவிட்டால், அவன் கட்டாயம் மோக்ஷத்தைக் கொடுத்தே தீருவன் என்பதைக் கைமுத்யத்தால் காட்டுகிறது. இந்த முதலதிகரணத்திலேயே ஸூத்ரகாரர் 'தந்நிஷ்஠ஸ்ய மோக்ஷோபதேசாத்' 'ஹேயத்வாவசநாச்ச' என்கிற ஸூத்ரங்களால் இதை விளக்குகிருர். இந்த ஸத்வித்யையில், 'ஸதா ஸோம்ய ததா ஸம்பந்நோ பவதி' 'ஸதிஸம்பத்ய' என்று இரண்டு வேற்றுமைகளால் ஈச்வரனேடு ஸம்பந்நமாவதைக் காட்டியிருக்கிறது. ஸத் என்னும் ப்ரஹ்மத்தினிடத்தில் ஸம்பந்நமாவது நித்ரை யென்னும் நிலை. இந்த ஆதாரத்தில், இந்த சிதாநந்த ஆகாசத்தில், மெத்தையில் படுத்திருப்பதுபோல இவன் படுத்து உறங்குகிருன். 'ஸதா' என்று மூன்ரும் வேற்றுமையாலும்

கூறுவது 'ஸத்' என்னும் ப்ரஹ்மத்தால் வலுவில் அணையப்படுகிறதால். இந்த அணைதலில் அவனுடைய ப்ரீதி க்ருபாப்ரயுக்த கர்த்ருத்வம் விளக்கப்படுகிறது. 'ஸம்பஷு' ஶப்தமும் இவன் மஹா பாக்ய ஸம்பத்தியைப் பெறுவதையும் வ்யஞ்ஜநம் செய்கிறது. திருவடிக்குத் தன்னுடைய ஸர்வஸ்வ மென்றுசொல்லி யளித்த பரிஷ்வங்கம் இவனுக்கு வலுவில் புந: புந: வந்துகொண்டேயிருக் கிறது. 'யதா ப்ரியயா ஸ்த்ரியா ஸம்பரிஷ்வக்த:' என்று சொல்லும் ச்ருதி 'ஹதஷரஸம் பரிஷ்வஜே' என்றது போன்ற ஸ்வயங்க்ரஹ ரஸத்தை நினைக்கிறது. பர்யங்க மாகும் சேஷத்வ ரஸத்தி லல்லவோ ஸர்வாதிபதி ப்ரஹ்மம் ரஸிக்கிறது. 'பூமக ளார் தனிக்கேள்வ னொருகதியின் சுவைதந்திட் டொழிவில னென்னோடுடனே' என்று ஆழ்வார், 'பூமகள் எல்லையற்ற காதலோடு அணையும் புருஷோத்தமன் இப்படிக் காதலோடு ஜீவராசிகளைத் திரும்பவும் திரும்பவும் அணைந்து ஸுகப் படுகிறானே' என்று இந்த ப்ராஜ்ஞ பரிஷ்வங்க ரஸம் காட்டும் பரமாத்ம ப்ரேம குணத்தி லீடுபடுகிறார். இந்த ஈக்ஷத்யதிகாணத்தில் கல்பதரு வென் னும் அமலாநந்தருடைய அத்வைத வ்யாக்யாநத்தில்,

"ஸதா ஸதா நதபெரயஸஞ்சக்ஷணாஸ்ரிதழ ।
யதாஸ்ஸ்விஷ்ட்டி ஸஸக்ஞம் தம் வந்தே ஸர்வோஷோத்தமழ ॥"

என்று ஓர் அழகிய மங்கள ச்லோகம் படித்துளது. 'ஸதா' என்பதற்கு ஸர்வோத்தமையான மஹாலக்ஷ்மி என்பது பொருள். 'நாரீணாமுத்தமாவதூ:' என்று சொல்லப்பட்ட ஸர்வோத்தம ஸ்த்ரீ. 'எவள் பரமாநந்த ஜ்ஞாநங்களை யுடைய 'ஸத்' என்னும் எந்தப் புருஷோத்தமனை இன்பத்துடன் அணைகிறாளோ, அந்தப் புருஷோத்தமனை நான் நமஸ்கரிக்கிறேன்' என்று அந்த ச்லோகத்தின் பொருளென்று தீக்ஷிதர் அதன் பரிமள வ்யாக்யாநத்தில் காட்டியிருக்கிறார். ஸாங்க்ய மதத்தில் கோடி கோடியான புருஷர்க ளென்னும் ஜீவர்களை ஒப்புக் கொண்டும், இத்தனை புருஷர்களுக்கும் உள்ளுயிரும் ஸத்தையைத் தருபவ னும் ப்ரியமாய் ரக்ஷிப்பவனுமான புருஷோத்தமனை ஒப்பாமல் நிரீச்வர வாதம் செய்வது தப்பு. ஸர்வஜ்ஞனும் ஸர்வ சக்தனுமான ஈச்வரனை 'ஸத்' என்றும், 'காரணம்' என்றும் ஒப்பாமல், குருட்டு மூல ப்ரக்ருதியை ஜகத் காரண மென்றும், அந்த ப்ரக்ருதி ஜீவர்களின் மோக்ஷத்திற்காக ஜகத் ஸ்ருஷ்ட்யாதி களைச் செய்கிற தென்றும் சொல்லுவது தப்பென்று விளக்குகிறது. ஜகத் காரணமான ஸத் தென்னும் ப்ரஹ்மம் ச்ரிய:பதியான புருஷோத்தமனே என்று ஸ்ரீ பாஷ்யத்தில் ஸாதிப்பதைக் கல்பதருகாரர் இங்கே தம் தீர்மாநமாக விளக்கு கிறார். 'மனனக மலமற' என்று ஸாங்க்ய மதாநுயாயியான யோகிகள் ஸ்வ ஸ்வரூபத்தையே ப்ரக்ருதி வியுக்தமாகக் கேவலமாக த்யாநித்து, அதைமட்டும் பிரித்துத் தனித்துக் காண்பதே யோகப்ரயோஜன மென்று சொல்லிக்கொண்டு, எல்லா ஆத்மாக்களையும் எல்லா உலகங்களையும் ஒன்றுசேர்த்து ஒருயிரான தன்னுள் ஒன்றுபடுத்தி ஸர்வமும் வாழவேண்டு மென்பதிலேயே காதலும் கருணையும் கொண்டு ஸர்வத்திற்குள்ளும் புகுந்து வ்யாபித்து ஓயாமல் ரக்ஷித்து வரும் ஸர்வாந்தர்யாமி தத்வத்தை மறுப்பது யுக்தமல்ல வென்று காட்டுகிறார். பரமாத்மா நம்மோடு கூடும் காதலைக் காட்டிக்கொண்டேயிருக்க, ஸாங்க்ய

மத யோகிகள் அந்த ஆநந்தமயத்தோடு கூடித் தனிமை நீங்க ஆசைப்படாமல் தம் தனிமையையே பரம ப்ராப்யமாகக் கொள்ளுகிறார்களே யென்று சோகத்தை ஸூசிக்கிறார். இந்த அதிகரணத்தில் ஸ்வாப்யய ஸூத்ரத்தால் பரமாத்மாவின் நிர்வ்யாஜ ஸ்வயம் பரிஷ்வங்க ப்ரேம கருணைகளைக் காட்டத் தொடங்கி, சாஸ்த்ர நடுவில் பல இடங்களில் ஸௌஷுப்த்யவஸ்தையில் பரமாத்மா ஆவிஷ்காரம் செய்யும் இக்காதல் பித்தைக் காட்டி, சாஸ்த்ர முடிவிலும் ஸ்வாப்யயத்தை ஓர் ஸூத்ரத்தால் குறிக்கிறார். அதற்கு முன் ஸூத்ரத்தில் மோக்ஷமடையுந் தசையில் பரமாத்ம வின்பச் சுடரில் ப்ரீதயாவேசத்துடன் ஆவேசிப்பதையும் குறிக்கிறார்.

இரண்டாம் பாசுரம் முதலடியில் ஆநந்தமயாதிகரணமும் மேலதிகரணங்களும் "பொறியுணர் வவையிலன் இனனுணர் முழுநல மெதிர்நிகழ் கழிவினு மினனில னெனனுயிர் மிகு நரையி லனே' என்ற பின் அடிகளால் ஆநந்தமயாதிகரணமும், அந்தராதித்ய வித்யையை விசாரிக்கும் அந்தரதிகரணமும் ஸூசிக்கப்படுகின்றன வென்று ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமி விளக்கம். அந்த அதிகரணங்களையும், இந்தப் 'பாதத்திலுள்ள மேலதிகரணங்களையும், இந்த சாஸ்த்ரத்தில் இன்னும் பல அதிகரணங்களையும் நன்கு ஸூசித்துப் பொருள் விளக்கம் செய்வதாகவும் கொள்ளலாம். ஆநந்தமயாதிகரணத்தில் பொறியுணர்வுக்கு ஆதாரமும் அதனால் தெரிந்துகொள்ளக்கூடியதுமான அந்நமயன் என்னும் புருஷ சரீரம், ப்ராணமய னென்னும் முக்ய ப்ராண வாய்வாத்மக சரீரம், மநோமயமான சரீர கோசம், அதற்குள்ளே விஜ்ஞாந மயமான ஜீவ னென்னு முயிருமான கோச சரீரமும், அதற்குள்ளே ஆநந்தமய மென்னும் ஒருவருக்கும் சரீர மல்லாததும் இத்தனைக்கு முட்பட்டதும் வேறுபட்டதுமான சரீரியும் வர்ணிக்கப்பட்டு, அந்த ஆநந்தமய னென்பது முதலிலே ஜ்ஞாநமென்றும் 'விபஸ்சித்' என்று முழுவுணர்வான ஸர்வஜ்ஞ ப்ரஹ்ம மென்றும், அது ப்ராணிகளுக்கு மோக்ஷ ஸாதநங்களைக் கொடுத்துக் காப்பாற்றுவதற்காக ஆசைப்பட்டு ஜகத்தைத் தானு முள்ளிருந்து தன்னையும் கார்யமாகச் சேர்த்து ஸ்ருஷ்டித்த தென்றும், சேதநாசேதநாதி ஸகலமும் அதற்கு சரீரமாகையால் அதை நிஸ்ஸங்கோசமாய் எல்லாவற்றுக்கும் 'சரீரி' யென்றும், 'சாரீராத்மா' வென்றும் வர்ணித்துள்ளது. இங்கே வர்ணித்திருக்கும் ஐந்து புருஷன்களில் அந்நமயம் முதல் விஜ்ஞாநமயன் வரையிலுள்ள 'சென்று சென்று பரம்பரமாய்' என்றபடி உள் புருஷர்களைக்காட்டிலும் அதிரிக்தமான ஆநந்தமய புருஷன் ஜகத் காரணமான ப்ரஹ்ம மென்றும், அது 'முழுவானந்த' மென்றும், கணக்கிடக்கூடாத ஆநந்த குணத்தையுடையதென்றும் அங்கே தீர்மானம். ஆநந்தமய னென்பது ஜீவனென்று பிறர் சொல்வது தப்பு. 'சாரீரனை ஆத்மா வென்று சொல்லியிருப்பது ஒரு சரீரத்தில் மட்டிலுள்ள ஜீவனைத்தான் சொல்லு' மென்பது பூர்வ பக்ஷம். அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் சொல்லியிருக்கிறபடி, ஸகல ஜகத்திலும் ஸகல சேதநாசேதநங்களிலு முள்ளிருந்து எல்லாவற்றையும் தன் சரீரம்போல் நியமிக்கு மோர் வ்யாபக உயிரான ஈச்வர சரீரனிடத்தில் 'சாரீரன்' என்ற பதம் முக்யமாகப் பொருந்து மென்பது தீர்மானம். [தொடரும்]

தமிழ்நாடு ... 129269

ஸ்ரீ :

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்ஶடகோப

ஸ்ரீ ஸ்ரீரங்கஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

சிகையின் முக்யத்வம்

[ஸ்ரீ. உப. அத்தி. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர்,
ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

ஸகல தர்மானுஷ்டானங்களுக்கும் யோக்யமான இப்பாத கண்டத்தில் அந்தந்த வர்ணங்களுக்கும் ஆச்ரமங்களுக்கும் அநுகுணமான கர்மாக்களை அநுஷ்டித்தால் நன்மை பெறலா மென்று மஹர்ஷிகள் அறுதியிட்டார்கள். 'எந்தக் கர்மாவை அநுஷ்டிக்கவேண்டும் ? எதை விடவேண்டும் ?' என்பதை ஶாஸ்த்ரங்களால் அறியவேண்டு மென்பதை ஸ்ரீ கீதாசார்யன்,

"தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ ।
ஜ்ஞாத்வா ஶாஸ்த்ரவிதானோக்தம் கர்ம கர்துமிஹார்ஹஸி ॥"

[எது செய்யத் தகுந்தது ? எது செய்யத்தகாதது? என்கிற ஸம்ஶய முண்டாகில் ஶாஸ்த்ரத்தையே ப்ரமாணமாகக் கொள்ளவேண்டும்] என்று உபதேசித்தார். ஆகையால் வேதம் உப ப்ரஹ்மணம் இவைகளில் சொல்லப்பட்டவைகளுக்கே தர்மத்வம் உண்டு ; மற்ற ஸ்வேச்சயா க்ரியமாணங்களுக்குத் தர்மத்வம் கிடையாது. அம்மாதிரி யில்லாமல் இஷ்ட ப்ரகாரம் செய்கிறவர்களுக்கு நல்ல கதி கிடையா தென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

"ய: ஶாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்ததே காமகாரத: ।
ந ஸ ஸித்திமவாப்நோதி ந ஸுகம் ந பராம் கதிம் ॥"

[எவன் ஶாஸ்த்ர விதியை விட்டு இஷ்ட ப்ரகாரம் கர்மாக்களைச் செய்கிறானோ அவன் கார்யஸித்தியை அடையமாட்டான். அவனுக்கு ஸுகம் உண்டாகாது; பரகதியும் கிடையாது.] ஆகையால் வேதம் ஸ்ம்ருதி இவைகளில் சொல்லப்பட்ட விஷயங்களுக்குத் தர்மத்வம் என்று சொன்னதாயிற்று. கௌதமர், 'வேதோ தர்மமூலம் தத்விதாம் ச ஸ்ம்ருதிஶீலே' என்று வேத வித்துக்களுடைய ஸ்ம்ருதி ஆசாரம் இவைகளுக்குத்தான் ப்ரமாணத்வம் உண்டு என்கிறார். ஆகையால் இவைகளால் சொல்லப்பட்ட விஷயங்களுக்கே தர்மத்வம் உண்டென்றும், மற்றவைகளுக்குத் தர்மத்வம் கிடையா தென்றும் முடிந்தது.

இவைகளுள் சிகாதாரணமும் ஒன்று. ஶாஸ்த்ரங்களில் இதற்குச் 'சூடா கர்மம்' என்று பெயர். ப்ராஹ்மணன் ஒவ்வொருவனுக்கும் நாற்பது ஸம்ஸ்

காரங்கள் ஶாஸ்த்ர விஹிதங்கள். 'அதூஸிம்ஶகீஷம்ஷாஶெஷம்ஷூ தஃ' என்று ஸூத்ரம். அதில் சூடா கர்மமானது ப்ராஹ்மணர்களுக்கு முதல் அல்லது மூன்ருவது வயதில் செய்யப்படவேண்டு மென்று மநு சொல்கிருர்.

"அஷெகூஉ விஜாதீநாம் ஷவெஷாஶெவயஉதஃ ।
ஷூயமெஉஷெ தூதீயெவா கதூவூம் ஶூ-திஶாஷிதழ ॥"

என்று ச்ருதி சொல்கிறது.

ஆகையால் ப்ராஹ்மணர்கள் ஒவ்வொருவரும் தம்தம் ஆசாரப்படி சிகை வைத்துக்கொள்ளவேண்டும். இப்படிச் சௌள கர்மாவைச் செய்யாமல் சிகையைக் கத்தரித்துக்கொள்வது ஶாஸ்த்ரத்துக்குப் புறம்பானதென்பது ஸித்தம். அந்த சிகையை முன்பு வைத்துக்கொள்ளுவதா பின்பு வைத்துக் கொள்ளுவதா என்று ஸம்ஶயம் உண்டாகலாம். அதற்கு வைத்யநாதர் வர்ணாச்ரம காண்டத்தில்,

"யஷூ தெஶெயகூ ஆரஃ வரஶம்வயெ-உண ஆகதஃ ।
ஶூ-திஷூ கூவினொயெ நஷஆ ஆரஷூ உஹுதெ ॥"

[எந்தெந்த தேசத்தில் எந்தெந்த வர்ணங்களுக்குப் பரம்பரையாக எந்தெந்த ஆசாரம் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறதோ, அதையே அவரவர்கள் ஆச்ரயிக்க வேண்டும்] என்கிருர். ஆகவே, அவரவர்கள் ஆசாரப்படி சிகை வைத்துக் கொள்ள வேண்டும் என்றதாயிற்று. சிகை யில்லாமற்போனல் அதற்கு ப்ராயச்சித்தமும் சொல்லப்பட்டிருக்கிறது.

"விநாயஜ்ஞோபவீதெந ஶிவயா அவிஜொதகஃ ।
உஷிவொயதிஶொஹாதூவாவகாஶீஹவெகஷிஜஃ ॥" [தேவலர்]

[எவன் ப்ரஹ்ம ஸூத்ரம் சிகை இவை யில்லாமலோ அல்லது சிகையை மோஹத்தால் எடுத்துவிட்டோ கர்மங்களைச் செய்கிருனே அவன் பாபத்தைச் செய்தவனுக ஆவான்] என்றும்

"ஶிவயாஷஹஸூத்ரெணவிநாவதெஉதயொவிஜஃ ।
உவொஷ்யஜநீஶெகாம் வம்அஹவெநஶயதி ॥" [மார்க்கண்டேயர்]

[எவன் சிகையும் ப்ரஹ்ம ஸூத்ரமும் இல்லாமலிருக்கிருனே அவன் ஒரு நாள் உபவாஸ மிருந்து பஞ்சகவ்யம் சாப்பிட்டால் சுத்தியடைகிருன்] என்றும்,

"ஶிவாம்விநாவிஜஶ்ரெஷ்டஃ கணெஉஶொவாஷஶொஉஷிஃ ।
யூதூதஶொஷஶாதூயஉம் காயகூஷூம்ஷஆ அனெக ॥"

"யாவதூவாவ-நஜ-உதாதாவதூணெ-உநயாஶயெக" [கௌதமர்]

[ப்ராஹ்மணன் சிகை யில்லாமலிருந்தால் காதில் பசுவினுடைய வால்மயிரைத் தரித்து அந்த தோஷ சாந்திக்காகக் க்ரயக்ருச்ரம் என்னும் வ்ரதத்தை அநுஷ்ஷிக்கவேண்டும். எப்பொழுது சிகை உண்டாகிறதோ அப்பொழுது வால்

ரோமத்தை எடுத்துவிடவேண்டும்.] என்றும் இத்யாதி ப்ரமாணங்களால் சிகையின் முக்யத்வமும் அதில்லாவிட்டால் ப்ராயச்சித்தமும் சொல்லப்பட்டிருக்கின்றன.

இங்குச் சிலர் க்ராப் என்பது ப்ரமாணங்களில் சொல்லப்பட்டிருக்கும் சிகையாகாதோ வென்று ஸம்ஶயிப்பார்கள். அதற்கும் ஸர்வஜ்ஞரான ப்ருகு மஹர்ஷி,

"ஸதோபவீதிநா பாவ்யம் ஸதா பத்தஶிகேந ச ।
விஶிகோ வ்யுபவீதஶ்ச யத்கரோதி ந தத்க்ருதம் ॥"

[எப்பொழுதும் ப்ராஹ்மணன் உபவீதியாகவும் கோதி முடிந்த சிகையை யுடையவனாகவு மிருக்கவேண்டும். ஶிகையிருந்துகொண்டு கர்மாவைச் செய்தால் அக்கர்மம் நிஷ்பலமாகும்] என்றும், ஸம்வர்த்தர்

"உபவீதம் ஶிகாபந்தம் ஊர்த்வபுண்ட்ரம் விநா க்ருதம் ।
அபவித்ரக்ருதம் கர்ம விப்ரஸ்ய விஃபலம் பவேத் ॥"

[உபவீதம் சிகாபந்தம் பவித்ரம் இவைக ளில்லாமல் செய்கின்ற கர்மா நிஷ்பலமாக முடியும்] என்றும் சொல்லுகிறார். இங்கு விவேகிகள் மேற்கூறிய இரண்டு ச்லோகங்களிலும் 'பத்தஶிக:' 'ஶிகாபந்தம்' என்ற விஶேஷணத்தை ஊன்றிக் கவனிக்கவேண்டும். க்ராப்பாக இருந்தால் 'ஶிகாபந்த:' என்ற பதம் எப்படிப் பொருந்தும்? மேலும் ப்ராஹ்மணன் நித்ய கர்த்தவ்யங்களில் ஒன்றாகிய ஸ்நாநத்தின் முடிவில் துடைத்துக்கொள்ளாமல் தேவ பித்ரு ப்ரீத்யர்த்தம் கேஶாம்புவை ஜலக் கரையில் விடவேண்டும் என்று ஸச்சரித்ரஸுதாநிதியில் "தேவா:பிபந்தி கேஶாம்பு ஶரீராம்பு ததர்ஷய:" [தேவர்கள் ப்ராஹ்மணனுடைய கேசத்திலிருக்கும் ஜலத்தைச் சாப்பிடுகிறார்கள்] என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் சிகை வைத்துக்கொள்வதினால் கர்மஸாபல்யமும் பகவதாஜ்ஞா பரிபாலநமும் பித்ருதேவ ப்ரீதியும் பரகதி ப்ராப்தியும் ஸித்திக்கிறபடியால் சிகாதாரணம் மிகவும் அவச்யமாகிறது.

"த்ருஷ்ட்யா ஶ்ரீயஜ்ஞாங்கே நரஹரேஸ் ஸம்ஸ்தாவபுர்வித்யாமயம்
தர்கவ்யாகரணாதிஷு ப்ரவசநாந்யாதிபத்யோபோதிதே ।
ஶ்ரீபாஷ்யாதிஷு ஸம்ஸத்ஸு விவ்ருதே தத்த்வஸ்கோஷ்ய நூந்ஶ்ரீதாநு
ஸஶ்ரீரங்க ஶடாரியோகி திருகோவிலீயாத்வஹ ஸம்ஸஜா: ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஏஜென்ஸி நிபந்தனைகள்.

ஒரு தடவையில் 10 பிரதிகளுக்குக் குறையாமல் எடுத்துக்கொள்ளுபவர்களுக்கு 100-க்கு 20 வீதம் கமிஷன் கொடுக்கப்படும். ஏஜெண்டுகள் காபி 1-க்கு 4 அணு வீதம் டிபாஸிட் கட்டவேண்டும். புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பதற்கும் கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு நேரில் ஆபீஸுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும். ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸகுண ப்ரஹ்ம நிர்ணயம்

[ஸம். 9. ஸஞ்சிகை 2. பக்கம் 42-ன் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உ.ப. V. ஸ்ரீநிவாஸையங்கார், ஸ்ரீ ஶார்ங்கீ விஹார்,
கோவிந்த நகர், மலாட், பம்பாய்]

மறுநாள் ஸபை கூடியதும், முதல்நாள் வாதத்தைத் தொடர்ந்து ஸூதர் ஶங்கராசார்யர் ஸாதிக்கிறார்:—உபய லிங்காதிகரணத்தில் ப்ரஹ்மம் ஸமஸ்த விஶேஷ ஶூந்யம் என்று அவர்கள் சொல்வது மிகவும் அயுக்தம். அந்த அதிகரணத்தின் தாத்பர்யம் 'ஹேய குணங்களை நிஷேதித்து ஸமஸ்த மங்கள குண விஶிஷ்டனானவன் பரமாத்மா' என்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறது. இதையே நம் பாஷ்யகாரரும், 'ஸவிஶேஷம் ப்ரஹ்மேத்யேவ ஹி தத்த்வவித:' என்று சொல்லியிருக்கிறார்.

தீக்ஷிதர்:—ஸூத்ரத்திலிருக்கும் உபய லிங்க ஶப்தத்தை அநாதரித்து, ஸம்பந்தமில்லாததான தோஷங்களை நிஷேதிப்பதாகச் சொல்வது உசிதமில்லை.

ஸூ. ஸ்வாமி:—ச்ருதி ஸூத்ரங்களில் சொல்லப்பட்ட குணத்தை ஸ்வரூபத்துக்கு ஸம்பந்தமில்லாததாக நீங்கள் சொல்வது என்ன ந்யாயமோ? ஒரு வஸ்துவை நிர்க்குணமாக நிர்ணயிப்பதற்கு, முதலில் ஸகுணமாகச் சொல்லி, பிறகு அந்தக் குணங்களைக் கொண்டு குணத்தை நிஷேதித்து நிர்க்குணமாக ஸ்தாபிக்க முயல்வது உசிதமில்லை. குணம் குணத்தை நிஷேதிக்க உபயோகப் பட்டதாகக் கேள்விப்பட்டதுகூட இல்லையே! இது விபரீதார்த்தமல்லவோ?

தீக்ஷிதர்:—குணங்கள் அவித்யையின் காரணத்தால் ஏற்பட்டதால் அவைகளைச் சொல்லி நிஷேதிக்கிறோம் ஸ்வாமீ!

ஸூ. ஸ்வாமி:—லோக ரீதியாகவாவது ஶாஸ்த்ர ரீதியாகவாவது ஸர்வஜ்ஞத்வாதிகள் தோஷமானவையென்று சொல்ல ப்ரமாணமே கிடையாதே. ஆனதால், சுருங்கச் சொல்லில், தோஷமான குணங்கள்தான் நிஷேதிக்கப் படுவதால் ஜாகரிதாவஸ்தையிலும் ஸ்வப்நாவஸ்தையிலும் ஜீவனுக்கு ஸந்த்யதிகரணத்தில் என்னென்ன தோஷங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவோ, அவை பரமாத்மாவுக்கில்லை யென்றல்லவோ ஸூத்ரக்காரரின் அபிப்ராயம்? மேலும், 'ஸேஷாதி ச ஸ ஏவ ப்ரக்ருதைதாவத்த்வம் நாஸ்தி' முதலிய ஸூத்ரங்களால் அப்ரஸ்துதமான உபயோகமற்ற உங்களுடைய அர்த்தஸித்தி ஏற்படுவதில்லை. அப்படியிருக்குமானால், பிற்பட்டு, 'ப்ரக்ருதைதாவத்த்வம் ஹி ப்ரதிஷேததி ததோ ப்ரவீதி ச பூய:' என்கிற ஸூத்ரம் விரோதிக்கும். அதற்கு ஸூத்ரம் 'ப்ரக்ருதம் ப்ரதிஷேததி' என்றிருந்தாலாவது தீக்ஷிதர் பக்ஷத்துக்குக் கொஞ்சம் இடமுண்டோ என்னவோ. 'ப்ரக்ருதைதாவத்த்வம்' என்று சொல்லி

யிருப்பதால், அவர்கள் பக்ஷத்தை அடியோடு கவிழ்த்து விடுகிற தாகிறதே! ஆனதுபற்றி இதற்கு அர்த்தம் எப்படிச் சொல்லவேணு மென்றால், நிஷேத விஷயமான எல்லாக் குணங்களும் விஹிதமாக உள்ளவைகளுக்கு அநுகுண மாக நிஷேதிக்கப்படுகின்றன வென்று சொல்லவேண்டுமே யொழிய ஸர்வ குண நிஷேதம் பொருந்தாது. ஆதலால், '𑌮𑌾𑌯𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌕𑌾𑌰𑍍𑌤𑍍𑌸𑍍𑌨𑍍𑌯𑍇𑌨 𑌅𑌨𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍' என்கிற ஸூத்ரத்தால் ப்ரபஞ்ச மித்யாத்வம் சொல்லப்பட்டதன்று. ஸ்ரீ பாஷ்யத்திலும், '𑌮𑌾𑌯𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 [illegible] 𑌨𑌾𑌨𑌾𑌵𑍈𑌚𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌜𑌾𑌗𑌰𑌿𑌤𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑌵𑍈𑌲𑌕𑍍𑌷𑌣𑍍𑌯𑍇𑌨 [illegible] 𑌮𑌾𑌯𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇' என்றும் '𑌵𑌿𑌶𑍇𑌷 [illegible]' என்கிற இடத்தில் '𑌮𑌾𑌯𑌾' ஶப்தம் விசித்ர ஸ்ருஷ்டி விஶேஷபர மென்றும் வ்யக்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இருக்கட்டும்: அத்வைத ஸித்தாந்த ரீதியாக மித்யார்த்தம்தான் என்று வேணுமானாலும் வைத்துக் கொள்வோம். '𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑍇 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑌾𑌹 𑌹𑌿', '𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌤𑌾𑌰𑌂 𑌚𑍈𑌕𑍇 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌦𑌯𑌶𑍍𑌚' முதலிய பூர்வ பக்ஷ ஸூத்ரங்களால் நீங்கள் ஸ்வப்நார்த்தங்களுக் கல்லவோ மித்யாத்வம் சொல்லுகிறீர்கள்?

தீக்ஷிதர்:—ஸத்யம். ஸ்வப்நார்த்த மித்யாத்வம் அதிகரணத்துக்குச் சொன்ன விஷயம். கைமுதிக ந்யாயத்தால் இதுவே மித்யை யானல் ஜாகரிதா வஸ்தையி லுள்ளவற்றிற்குக் கேட்கவா வேண்டும்? '𑌕𑌾𑌰𑍍𑌤𑍍𑌸𑍍𑌨𑍍𑌯𑍇𑌨 𑌅𑌨𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍' என்றல்லவோ ஸூத்ரகாரர் சொல்லியிருக்கிறார்.

ஸு. ஸ்வாமி:—விச்வம் மித்யா வென்று ஸித்தாந்தம் சொல்லி விட்டால், பிறப்பட்டு ஸ்வப்நார்த்தங்கள் ஸத்ய மென்கிற பூர்வபக்ஷம் எங்கேயாவது ஏற்படுமா வென்பதை ஸபையோர்களே! கொஞ்சம் கவனிக்கவேணும்.

தீக்ஷிதர்:—ஸ்வப்நார்த்தத்தை மித்யை யென்று சொல்லிக் காட்டி, ஜகத் மித்யை யென்று எடுத்துக் காட்டுவதற்காக ஏற்பட்ட விஷயம் இது.

ஸு. ஸ்வாமி:—தீக்ஷிதர்வாள்! தங்கள் வ்யவஹாரம் நன்றாயில்லை. ப்ரபஞ்சத்தை மித்யையாக நிரூபித்து, தந்தர்க்கதமான ஸ்வப்நத்தையும் மித்யை யென்று நிரூபிப்பது உசிதம். அப்படி யிருக்க: நீங்கள் மாற்றிச் சொல்வது ரொம்ப அழகு! முதல் ஸூத்ரத்திலேயே ப்ரபஞ்சம் மித்யை யென்று சொல்லி, அந்த ப்ரபஞ்சமும் ஜ்ஞாநத்தால் பாத்யம் என்றும், அப்படிப்பட்ட ஜ்ஞாந ப்ரமான ஶாஸ்த்ரம் ஆரம்பணீய மென்று தாங்கள் சொன்னதை மறந்து விட்டீர்களோ இவ்விடத்தில்? மேலும் '𑌕𑌾𑌰𑍍𑌤𑍍𑌸𑍍𑌨𑍍𑌯𑍇𑌨 𑌅𑌨𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍' என்ற விடத்தில் ஜாகராவஸ்தையைப் பற்றிச் சொல்லும் சிந்தத்தைக் கூடக் காணவில்லையே!

தீக்ஷிதர்:—'𑌕𑌾𑌰𑍍𑌤𑍍𑌸𑍍𑌨𑍍𑌯' ஶப்தத்தால் அதுவும் அடங்கினதுதான்.

ஸு. ஸ்வாமி:—இது தவறு. ஸ்வப்நார்த்தத்தில் ஏற்பட்ட எல்லாவற்றை யும் வேண்டுமானல் 'கார்த்ஸ்ந்ய' ஶப்தத்தால் சொல்லலாமே யொழிய, அதைத் தவிர்த்த ஜாகராவஸ்தையி லுள்ளதையும் சேர்த்துச் சொல்வது நன்று

யில்லை. அல்லது ஸ்வப்நார்த்தத்திற்கு மித்யாத்வம் சொல்வதற்காக ஜாகரிதா வஸ்தையி லுள்ளவைகளுக்கு அநபிவ்யக்தமான ரூபத்தை ஹேதுவாகச் சொல் வது வ்யதிகரணமாக வல்லவோ ஆகும்? "ஸ்வப்நாவஸ்தா: மித்யா-க-தஃ? க்ருத்ஸ்ந வ்யக்த்வஸ்வரூபத்வாத்" என்றால் நன்றாயிருக்கும். அப்படிக் கில்லாமல் "ஸ்வப்நாவஸ்தா: மித்யா க-தஃ? ஜாகரிதாவஸ்தா நாம் க்ருத்ஸ்நவ்யக்த்வஸ்வரூபத்வாத்" என்று வ்யதிகரணமாகச் சொல்வதுண்டோ? ஆகையால் சுருக்கமாகச் சொல்லில், ஸ்வப்நார்த்த மித்யாத்வத்தை ஸாதிப்பதற்காக அதிலுள்ள க்ருத்ஸ்நவ்யக்த்வஸ்வரூபத்வத்தை ஹேதுவாக ஸூத்ரகாரர் சொன்னாரே யொழிய விச்வமித்யாத் வத்தை ஸ்தாபிக்க நினைத்ததல்ல. ஸ்வாமி தேசிகனும் அதிகரண ஸாராவளியில் இந்தப் பாதாரம்பத்தின் பாவத்தை அழகாகப் பின்வரும் ச்லோகத்தால் எடுத் திருக்கிறார்.

"ஸைந்தவ்யம் ப்ரஹ்மணஸ்ஸ்வம் ததநுஹத்வேந ப்ரஹ்மஸித்தி ப்ரஸாதஃ
ஸந்த்யஸ்ஸைத்தஸ்ஸ்ருஷ்டிஸ்ததிஹ திநத்ருஷ்டி கரஷ்டிக ஸோபி।
நிஷ்ப்ரத்யக்ஷம் ச நித்யம் யதி வசநமிதம் ஸ்யாத் தோஷஸாந்த்யர்த்த
ஸத்யம் சேத் ப்ரஷ்டா ஸ்யாத் பூர்வஸித்திரிதி வாக்ஸித்தியே ஸேஷவாதஃ॥"

தீக்ஷிதர்:—இருக்கட்டும்; மேற்கொண்ட ஸூத்ரங்களையும் விசாரிப் போம். 'ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்தி ச' என்கிற விடத்தில் ப்ரஹ்மாத் மைக்யம் ஸூத்ரக்காரர் சொல்லியிருக்கிறாரே. அப்படியிருக்க, நீங்கள் எப்படி இதை மறுக்க முடியும்?

ஸா. ஸ்வாமி:—'ஆத்ம' ஶப்தத்துக்குக்கு வேறு அர்த்தமும் உண் டென்பது தங்களுக்குத் தெரியாதோ தீக்ஷிதர்வாள்! விஶேஷமாக ஶரீர ஸம்பந்த முள்ளதற்கு ஆத்மா என்று பெயர் என்பது தங்களுக்குத் தெரி யாதோ? ஆனதால், ஸூத்ரத்திலுள்ள 'ஆத்ம' ஶப்தத்துக்கு ஶரீரி என்று அர்த்தமாகிறது. அந்தர்யாமி ப்ராஹ்மணாதிகளிலும் ப்ரஹ்மம் ஸர்வ ஶரீரி யென்று சொல்லப் பட்டிருப்பதாலும், 'யஸ்ய ப்ருதிவீ ஶரீரம் யஸ்யாத்மா ஶரீரம்' என்கிற பல ச்ருதிகளைக் கவனித்தால், நாங்கள் சொல்லுகிறபடி அர்த்தம் சொல்வதுதான் உசிதம். தவிர, 'த்யுப்வாத்யாயதநம் ஸ்வஶப்தாத்' என்கிற ஸூத்ரத்திலுள்ள ஸ்வ சப்தமும், 'தமேவைகம் ஜாநத ஆத்மாநம் அந்யா வாசோ விமுஞ்சத' என்கிற விஷய வாக்யத்தி லுள்ள 'ஆத்ம' ஶப்தமும் பர்யாய பதங்களாய்ப் ப்ரஹ்மத்தையே சொல்லுகின்றன வென்பது ப்ரஸித்தம். ஆகையால், 'ஆத்ம' ஶப்தம் பரப்ரஹ்ம அஸாதாரண சப்தம். வேதாந்த ஸாரத் தில் ஸ்ரீ பாஷ்யகாரர்

"யஸ்மிந் த்யௌ: ப்ருதிவீ சாந்தரிக்ஷம் ஓதம் மந: ஸஹ ப்ராணைஶ்ச ஸர்வை: தமேவைகம் ஜாநத ஆத்மாநம் அந்யா வாசோ விமுஞ்சத அம்ருதஸ்யைஷ ஸேது: । தமேவைகம் ஜாநத ஆத்மாநம் இத்யாத்மஶப்தாத்"
என்று ஸாதித்தார். ஸ்ரீ பாஷ்யத்தில் மேலும்

"ப்ரத்யகாத்மந: ஸ்வஶரீரம் ப்ரத்யாத்மத்வாத் 'தேவோஹம்' 'மநுஷ்யோஹம்' இத்யநுஸந்தாநம் । ததா ப்ரத்யகாத்மநோ ப்ரத்யாத்மத்வாத் ஸர்வாத்மந: தஸ்யாபி ஆத்மத்வேநாநுஸந்தாநம் யுக்தமிதி"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதையே அபியுக்தர்கள் மதத்ரய ஸாரஸங்க்ரஹத்தில்

" [illegible] ।
[illegible] ॥ "

என்று ஸாதித்திருக்கிருர்கள்.

ச்ரோளதிகள்—(நடுவில் எழுந்து) இதென்ன விபரீதமான அர்த்தம் சொல்கிறீர்கள் இந்த ஸூத்ரத்துக்கு! '[illegible]' என்றல்லவோ இங்கு அநுஸந்தாநம் சொல்லியிருக்கிறது. அதுவும் ப்ராந்தி ரூப மென்பது ஞாபக மிருக்கவேணும். அஹம் பாவாதி ஸமஸ்த குணங்களு மில்லாத சுத்த ஸம்வித்து மாத்ர மல்லவோ எங்கள் ஸித்தாந்த ரீதியாக ப்ரஹ்ம ஸ்வரூப மென்று சொல்லப்பட்டிருக்கிறது?

பெருக. ஸ்வாமி—அப்படியானல் உங்கள் ஸித்தாந்தரீதியாக ப்ராந்தியே மோக்ஷோபாயமாக ஸூத்ரகாரர் சொன்னதாக வல்லவோ ஏற்படுகிறது? எதையாவது சொல்லித் தாங்கள் சொன்னதைச் சரி யென்று முடிவுகட்ட முயல்வது ஸூத்ர ஸ்வாரஸ்யத்துக்கு விரோத மில்லையோ? மேலும், இதிகரண ஸ்வாரஸ்யத்தைக் கவனித்தால், இங்கு த்ருஷ்டி விதிதான் ஸூசிக்கப்பட்டிருக்கிற தென்பது ஸ்வரஸமா யிருக்கிறது. ச்ருதியிலும் '[illegible]' என்று சொல்லியிருப்பதை ச்ரோளதிகள் கவனிக்கவேணும். ஆகவே, எல்லாவற்றையும் கவனித்துப் பார்த்தால், இந்த ஸூத்ரத்தில் த்ருஷ்டி விதிதான் சொல்லப்பட்டிருக்கிறதென்பது ஸித்தமாகிவிடுகிறபடியால், உபாஸ்யத்துக்கும் த்ருஷ்டி விசேஷத்துக்கும் உள்ள அத்யந்த பேதம் கொஞ்சமும் மறுக்க முடியாததால், இந்த இடத்தில் ஜீவனுக்கும் ப்ரஹ்மத்துக்கு முள்ள பேதந்தான் சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய, நீங்கள் சொல்லுகிறபடி ப்ரஹ்மாத்மைக்யம் சொன்னதன்று.

" [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥"

மஹாதேவ சாஸ்த்ரிகள்—பல தசையில் கவனித்தால் எங்கள் பக்ஷத்துக்கு அநுகுணமாக வல்லவோ ஸூத்ரக்காரர் ஸூத்ரம் செய்திருக்கிருர்? '[illegible]' என்கிற ஸூத்ரத்தைக் கவனித்தால் ப்ரஹ்மாத்மைக்யம் நன்ருகச் சொல்லப்பட்டிருக்கிறதே!

இப்பொழுது காலாதீதமாய் விட்டதால் மஹாராஜா ஸபையை மறுதினத்துக்கு ஒதுக்கிவிட்டார். [தொடரும்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்ஶடகோப

ஸ்ரீ ஸ்ரீரங்கஶடகோபயதீந்த்ர மஹாதேஶிகாய நம:

வேதத்திலும் வேலை நிறுத்தம்

தைத்திரீய ஸம்ஹிதையில் இரண்டாவது காண்டம் ஆரும் ப்ரச்நத்தில் ஆருவது அநுவாகத்தில், "அக்நேஸ்த்ரயோ ஜ்யாயாꣳஸோ ப்ராதர ஆஸந்" என்று ஆரம்பித்து, அதில் சொல்லப்படும் விஷயம்:— அக்நிக்கு மூன்று பேர்கள் தமையன்க ளிருந்தார்கள். அவர்கள் தேவதைகளுக்கு ஹவ்யங்களைக் கொண்டுகொடுத்து அந்த ச்ரமத்தாலேயே மரித்துப்போனர்கள். அதாவது: யாகம் பண்ணுகிறவன் ஒருவன் வேத மந்த்ரத்தைச் சொல்லி அக்நியில் ஹவிஸ்ஸைப் போட்டால், அக்நி அதை யெடுத்துக்கொண்டுபோய்த் தேவ லோகத்தில் தேவதைகளுக்குக் கொடுப்பான். சில தேவதைகள் யஜ்ஞபூமிக்கே வந்து அக்நியினிடத்தினின்றும் ஹவிஸ்ஸை க்ரஹித்துக் கொள்வார்கள். அது எப்படி யென்றல், த்வீபாந்தரத்தில் உள்ளவர்களுக்கு இங்கிருக்குமொருவன் தபாலாபீஸில் பணத்தைக் கட்டித் தந்தி மூலமாகத் தெரிவித்தால், எப்படி அவனுக்கு அங்குப் பணம் கிடைக்குமோ அப்படியும், எப்படி த்வீபாந்தரத்தி லிருக்கும் ஒருவன் நேராக இங்கு வந்து பணத்தை வாங்கிக்கொள்வனே அப்படிப் போலவும், வர்த்தமாந காலத்தில் ஒருவன் த்வீபாந்தரத்தில் பாட்டுப் பாடினல் அந்த ஶப்தத்தை வாயு அதே க்ஷணத்தில் இந்த த்வீபத்திற்குக் கொண்டு கொடுப்பனே அதுபோலவும், அக்நியாகிற மூன்ருவது பூதமும் ஹவிஸ்ஸைத் தன்னிடத்தில் போட்டு "இந்த்ராய ஸ்வாஹா, வாயவே ஸ்வாஹா" என்கிற ஶப்தமாகிற டெலிபோன் வார்த்தையை யஜமாநன் சொன்னல், எவ்விடத்திலும் வ்யாப்தமான தன்னுடைய ஸ்வரூபத்தாலே அந்த ஹவிஸ்ஸை அதிகமாகப் பண்ணி இந்த்ரன் முதலான தேவதைகளுக்குக் கொண்டு கொடுக்கிறன் என்பது வேதம் முதலான ஶாஸ்த்ரத்தில் ஸித்தமாக விருக்கிறது. இப்படிப் பல யாகங்களில் ஸமர்ப்பிக்கப்படும் ஹவிஸ்ஸை அக்நியின் ப்ராதாக்கள் ஆங்காங்குத் தேவதைகளுக்குக் கொண்டு கொடுத்து ரொம்பவும் கஷ்டப்பட்டுப் போனர்கள். அதன் பிறகு இந்த அக்நி, 'யாவனெருவன் ஹவிஸ்ஸை இப்படிக் கொண்டு கொடுக்கிறனே அவன் மரணத்தை அடைந்துவிடுவான்' என்றெண்ணிப் பயந்துபோனன். அதன்பிறகு அக்நி, எஜமானர்களான தேவதைகளாலே அறியப்படாதபடி ஜலத்தில் மறைந்துகொண்டான். அந்த வேலைக்காரனன அக்நியைப் பலவிடங்களில் தேட ஆரம்பித்தார்கள் தேவதைகள். அப்படி அவர்கள் ஜலத்தில் தேடும்போது அந்த அக்நியை ஒரு மீனனது தேவதைகளுக்கு ஜலத்தி லிருப்பதாகச் சொல்லிவிட்டது. பிறகு அக்நி வெகு கோபத்துடன் அந்த மத்ஸ்யத்

ளைதப் பார்த்து, 'ஹே! மத்ஸ்யமே! யாதொரு நீ தேவதைகளுக்கு முன் மறைந்துகொண்டிருந்த என்னைக் கோள் சொல்லித் தெரியப்படுத்தினாயோ, அப்படிப்பட்ட கோள் சொல்வதாகிற அபராதத்தைச் செய்த உன்னை, வலைஞர்களான செம்படவர்கள் தெரிந்து தெரிந்து கொல்லக்கடவர்கள். நீ ஒருவன் கோள் சொன்னதால் உன் இனத்தாரெல்லோரையும் வலை முதலான ஸாதநங்களாலே கொல்லக்கடவர்கள்' என்று சாபமிட்டான். 'அதவா, ராத்ரியிலேயோ பகலிலேயோ எப்பொழுதெப்பொழுது நினைக்கிறார்களோ அப்பொழுதப்பொழுதெல்லாம் கொல்லக்கடவர்கள்.' இந்த ப்ரகாரம் ஒரு மத்ஸ்யம் அக்நியினாலே சபிக்கப்பட்டபடியால், அக்குலத்தில் பிறந்த எல்லா மத்ஸ்யங்களையும் செம்படவர்கள் நினைத்தபோதெல்லாம் கொல்லுகிறார்கள். இதனால் ஒருவன் கோள் சொன்னால் அந்தப் பாபத்தாலே அவன் குலத்தி லுள்ளவர்களெல்லாம் அதனாலுண்டான கஷ்டத்தை யனுபவிப்பார்களாகையால், கோள் சொல்வதே கூடாதென்று ஏற்படுகிறது. அது மஹா பாபம் என்பதாகையாலேயே 'தீக்குறளைச் சென்றோதோம்' என்றாள் ஆண்டாள்.

இப்படி மத்ஸ்ய முகத்தாலே அக்நியைத் தெரிந்துகொண்ட பிறகு தேவதைகள் அக்நியை நோக்கி, 'ஓ! அக்நியே! இங்கே வா. எங்களுடைய ஹவ்யத்தை வஹித்துக்கொள். வேலை நிறுத்தம் செய்யாதே' என்று அவனை நிர்ப்பந்தித்தார்கள். அதற்கு அக்நி, 'நான் ஒரு வரத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்; அதைக் கொடுத்தால் வேலையை நிறுத்தாமல் செய்கிறேன்; அது என்னவெனில்: யாகம் செய்பவர்களாலே 'ஜுஹூ' என்னும் பாத்ரத்தில் வைக்கப்பட்டு (அதாவது தர்வியில் எடுக்கப்பட்டு) ஹோமம் பண்ணும்போது அக்நியில் விழாமல் தடுமாறிப் பரிதிக்கு அப்புறம் விழுந்த ஹவிஸ்ஸுக்களெல்லாம் இறந்துபோன என்னுடைய ப்ராதாக்களுக்கு பாகமாக ஆகவேண்டும்' என்று கேட்டுக் கொண்டான்.

தேவதைகளும் அவன் கேட்ட வரத்தைக் கொடுத்து ஸமாதாநம் செய்தனர். ஆகையினாலே இன்றளவும் தர்வியினாலே க்ரஹிக்கப்பட்டு ஹோமகாலத்தில் அக்நியில் விழாமல் பரிதிக்கு வெளியில் தவறி விழுந்த ஹவிஸ்ஸையெல்லாம் அக்நியின் ப்ராதாக்கள் பாகமாக அநுபவிக்கிறார்கள். அதனால் ஸந்துஷ்டர்களான அக்நி ப்ராதாக்கள் யஜமானனுக்கு ஸந்தோஷத்தை யுண்டு பண்ணுகிறார்கள். ஆகையால் அக்நிக்கு மூன்று பக்கத்திலும் பரிதியை (ஸமித்துக்களைப்) போடவேண்டும். அதனால் ராக்ஷஸர்களும் போக்கடிக்கப்பட்டவர்களாக ஆகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்தக் கதையினால் யஜமானனுக்கும் வேலைக்காரர்களுக்கும் எக்காலத்திலும் முரண்பாடு உண்டென்றும், வேலைக்காரர்களுக்கு அச் சமயத்தில் ஏதாவது ஸ்வல்ப ப்ரதாநம் பண்ணி ஸமாதாநம் செய்ய வேண்டும் என்கிற உபாய விசேஷமும் சொல்லப்படுகிறது.

வேலை நிறுத்தத்தால் வருந்தும் ஒரு வைதிக ப்ரபு.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விக்ருதி ௵ வைகாசி ௴ [1950 ௵ மே - ஜூன் ௴]

[உத்தராயணம், வஸந்த ருது, வ்ருஷப ௴.]

14—5—50	1௳	ஞாயிற்றுக்கிழமை	... சூந்ய திதி ; வ்ருஷப ரவி 22-24 ; (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்)
15—5—50	2௳	திங்கட்கிழமை	... சூந்ய திதி
16—5—50	3௳	செவ்வாய்க்கிழமை	... ஸர்வ அமாவாஸ்யை; அமாவாஸ்யை திதி; ஸ்ரீ அ. மடம் 39-ம் பட்டம் ஸ்ரீ பராங்குச யதீந்த்ர மஹா தேசிகன் திரு நக்ஷத்ரம்
28—5—50	15௳	ஞாயிற்றுக்கிழமை	... ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி வ்ரதம் ; காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜன் ப்ரஹ்மோத்ஸவத் தொடக்கம்
30—5—50	17௳	செவ்வாய்க்கிழமை	... ஸ்ரீ வரதராஜன் கருடோத்ஸவம் ; ஸ்ரீ நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்
1—6—50	19௳	வியாழக்கிழமை	... ஸ்ரீ அ. மடம் 35-ம் பட்டம் ஸ்ரீ ரங்கநாத யதீந்த்ர மஹா தேசிகன் திரு நக்ஷத்ரம்
2—6—50	20௳	வெள்ளிக்கிழமை	... த்விதீயை – த்ருதீயை திதி த்வயம்
3—6—50	21௳	சனிக்கிழமை	... சதுர்த்தி திதி
10—6—50	28௳	சனிக்கிழமை	... ஏகாதசி திதி
11—6—50	29௳	ஞாயிற்றுக்கிழமை	... அதிதி; ஸர்வ ஏகாதசி (வ்ரதம்)
13—6—50	31௳	செவ்வாய்க்கிழமை	... க்ருஷ்ண த்ரயோதசி திதி
14—6—50	32௳	புதன்கிழமை	... சதுர்த்தசி திதி; மிதுந ரவி 46–36 ;

மறுநாள் [ஆனி௴ 1௳ (15-6-50) வியாழக்கிழமை] ஷடசீதி புண்யகாலம்; அன்று மிதுந ஸங்க்ரமண தர்ப்பணம். 12-மாஸ ஸங்க்ரமணங்களுக்கும் தர்ப்பணம் செய்பவர்கள் அன்று ஸூர்யோதயத்திற்குப் பிறகு யதா ஸௌகர்யம் ஸங்க்ரமண தர்ப்பணம் மாத்ரம் செய்தால் போதும். நைமித்திகமான மிதுந ஸங்க்ரமண ச்ராத்தத்தாலேயே நித்யமான தர்ச ச்ராத்தம் ஸித்தித்து விடுமாகையால் அவர்கள் அமாவாஸ்யைக்காக அன்று தனியாகத் தர்ப்பணம் செய்ய வேண்டியதில்லை. 12-மாஸங்களிலும் மாஸ ஸங்க்ரமண தர்ப்பணம் செய்யாமல் 4-மாஸங்கள்மட்டும் தர்ப்பணம் செய்கிறவர்கள் அன்று குதப காலத்தில் தர்ச (அமாவாஸ்யை) தர்ப்பணத்தைச் செய்ய வேண்டும்.

பிழைத் திருத்தம்.

சென்ற ஸஞ்சிகையில் (92-ம் பக்கத்தில்) வெளி வந்த விக்ருதி௵ சித்திரை௴த்திய பஞ்சாங்க ஸங்க்ரஹத்தில் அடியில்கண்டபடி திருத்திக் கொள்ளவும்.

30—4—50	18௳	ஞாயிற்றுக்கிழமை	... த்ரயோதசி திதி
1—5—50	19௳	திங்கட்கிழமை	... ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தி; ஸ்ரீ மதுரகவிகள் திரு நக்ஷத்ரம்; சதுர்த்தசி பௌர்ணமி திதித்வயம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஸ்ரீ கல்யாணபிவர்த்திநீ ஸபா, மதுராந்தகம்.

3—2—50 மாலை 4-மணி ஸ்ரீ. உ.ப. P. N. ராகவாசார்ய ஸ்வாமி ஆத்யக்ஷ்யத்தில் V. T. லக்ஷ்மீ நரஸிம்ஹனல் 'ஸ்ரீஹயக்ரீவஸ்ய ஸர்வோத்க்ருஷ்டதா' என்பதுபற்றிய உபந்யாஸம் எழுதி வாசிக்கப்பட்டது.

10—2—50 மாலை 2 1/2-மணி ஸ்ரீ. உ.ப. A. S. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியின் ஆத்யக்ஷ்யத்தில், ஸ்ரீ. அ. மடம் 40-ம் பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருக்கல்யாண குணங்கள் ப்ரவசந கர்த்தாக்களாலும் வித்யார்த்திகளாலும் பரக்கப் பேசப்பட்டன.

14—2—50 மாலை 2 1/2-மணி ஸ்ரீ காரியம் வித்வான் ஸ்ரீ. உ.ப. ஜோ. ரங்காசார்ய ஸ்வாமியின் ஆத்யக்ஷ்யத்தில், 42-ம் பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கர் திருநக்ஷத்ர ப்ரயுக்தமாய் ஸபை கூடிற்று. ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருவுருவப் படம் மேளதாள வாத்யங்களுடன் ஊர்வலமாக எழுந்தருளப் பண்ணப்பட்டு ப்ரார்த்தனா மண்டபத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அத்யக்ஷர் ஸ்வாமி ஸ்ரீ அழகிய சிங்கரது ஔதார்யாதி கல்யாண குணங்களைக் கொண்டாடிப் பேசினர். அதையொட்டி ப்ரவசக கர்த்தாக்களும் வித்யார்த்திகளும் பிறரும் பேசினர்.

17—2—50 மாலை 3-மணி ஸ்ரீ. உ.ப. K. V. வீரராகவாசார்ய ஸ்வாமியின் ஆத்யக்ஷ்யத்தில் V. நரஸிம்ஹனல் 'விபீஷண விஷயே ராமஸ்ய ஸர்வோத்க்ருஷ்டதா' என்னும் விஷயம் ஸம்ஸ்க்ருதத்தில் எழுதி வாசிக்கப்பட்டது.

24—2—50 மாலை 4 1/2-மணி ஸ்ரீ. உ.ப. அட்வொகெட் L. C. ஸுந்தர வரதாசார்ய ஸ்வாமி ஆத்யக்ஷ்யம் வஹித்து 'மஹா விபூதி:', 'பகவதோ நாராயணஸ்ய ஸர்வோத்க்ருஷ்டதா' என்னும் விஷயங்களைப் பரக்க உபந்யஸித்தார்; உபந்யாஸாநந்தரம் யதோசிதம் தக்ஷிணை கொடுத்தார்.

V. நரஸிம்ஹன்

V. T. லக்ஷ்மீ நரஸிம்ஹன்

[கார்யதர்சிகள்]

* * * * *

ஸ்ரீ க்ருஷ்ண ஸபா, மாதுங்கா, பம்பாய்.

ஷை ஸபையார் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனல் அருளிச் செய்யப்பட்ட ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தை ஸம்ஸ்க்ருதத்தில் 24-12-49-ல் வெகு அழகாய் நடத்தினர்கள். பம்பாய் மாகாண ப்ரதம மந்த்ரி ஸ்ரீ. B. G. கேர் முதலிய அநேக ப்ரமுகர்கள்

விஜயம் செய்து நாடகத்தின் திறமையைக் கண்டு மகிழ்ந்தனர். திருவையாறு ஸம்ஸ்க்ருத காலேஜ் ஸ்ரீ. S. T. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்த்ரபுரம் ஸ்ரீ. E. D. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸுமதி, விவேகர்களாயும், மற்றும் தென்னிந்திய மஹாராஷ்ட்ர குஜராத் ஸ்திரீ புமான்களும், இதர நாடக பாத்ரங்களாய்த் தோன்றி வெகு விமரிசையாய் நடத்தினர்கள். இந்நாடகத்தின் வெற்றிக்குக் காரணம், ஷை ஸபை உப அக்ராஸநாதிபதியும், பம்பாய் லேபர் கமிஷனருமான ஸ்ரீமான் A. S. அய்யங்கார் ஸ்வாமியே. இந்நாடகத்தின் ஞாபகக் குறியாக ஆங்கிலத்தில் ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய நாடக மொழி பெயர்ப்பு புஸ்தக ரூபமாக வெளியிடப்பட்டது.

ஸ்ரீ. S. T. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் திருப்பாவை உபந்யாஸங்களும் ஏழு ஹரிகதா காலக்ஷேபங்களும் 15—1—1950 வரையில் வெகு ஆச்சர்யமாய் நடந்தன. ஸ்ரீ. E. D. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால், 'ஸ்ரீ ஆளவந்தார்' 'நம் பாணநாதன்' என்ற இரண்டு கதா காலக்ஷேபங்களும் நடத்தப்பட்டன.

V. ஸ்ரீநிவாஸன்,
K. தேசிகாச்சாரி,
[காரியதரிசிகள்]

[சென்ற மாசிமீ' த்திய ஸஞ்சிகையில் ஷை செய்தி ஸமக்ரமாக வெளிவராததால் இப்போது வெளியிடப்பட்டது. ஸம்பாதகர்.]

* * * * *

ஸ்ரீராம நவமி பங்குனி உத்திர மஹோத்ஸவங்கள்

அவளூர் அக்ரஹாரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸுந்தர வரதராஜப் பெருமாள், நிகழும் விரோதி ஹு. பங்குனி மீ'. 15௳ (28-3-50) செவ்வாய்க்கிழமை யன்று, ஸ்ரீராம நவமி மஹோத்ஸவத்தை முன்னிட்டு அத்யாச்சர்யமாக உத்ஸவம் கண்டருளினர், மத்யாஹ்நம் பெருமாள் தாயார் ஸ்ரீ தேசிகன்—இம்மூன்று திருநாமங்களுக்கும் விசேஷ திருமஞ்சநம் பண்ணப்பட்டது. 'ஶ்ருத்யாவஹ ஹ்ருஷீகேஶ:' 'அகலகில்லே னிறையுமென்று அலர்மேல்மங்கை யுறைமார்பா' இத்யாதி ஸூக்திகளால் உபாய தசையிலும், 'வைகுண்டே து பரே லோகே' 'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப' இத்யாதி ஸூக்திகளால் பல தசையிலும், 'அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா' 'நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோ: ஶ்ரீரநபாயிநீ ।' 'ராகவத்வே(அ)பவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி। அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷாநபாயிநீ ॥' இத்யாதி பல ப்ரமாணங்களாலும் திவ்ய தம்பதிகளின் நித்யயோகம் கண்டோக்த மாதலால், அதை அநுஸரித்துப் பெருமாளும் பிராட்டியும் திருமஞ்சநாநந்தரம் ஏகாஸநத்தில் எழுந்தருளி ஸேவார்த்திகளுக்குக் கண்கொள்ளாக் காட்சி யளித்தனர். ராத்ரி 8-மணிக்கு ஸ்ரீமதி விஜயா ராமஸ்வாமி 'ராம காநாம்ருதம்' எனப்படும் ஸுந்தரகாண்டக் கச்சேரி செய்து ச்ரோதாக்களைக் களிப்பூட்டினர். பங்குனிமீ' 20௳ (2—4—50) ஞாயிற்றுக்கிழமை யன்று ஷை திவ்ய தம்பதிகளுக்குப் பங்குனி உத்திர மஹோத்ஸவம் மிக்க வைபவத்துடன் நடத்தப்பட்டது.

அவளூர்,
3-4-50. அவளூர் அக்ரஹாரிகாள்.

* * * * *

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸபா, பம்பாய்

ஸ்ரீராமநவமி மஹோத்ஸவம் பம்பாய் மாதுங்காவில் 18—3—50 முதல் 2—4—50 வரையில் பகவத்க்ருபையால் உபந்யாஸ, ஹரிகதா காலக்ஷேப, ஸங்கீதக் கச்சேரிகளுடன்

நடந்தது. ஆசார்ய கடாக்ஷம்பெற்று ஸ்ரீமத் ராமாயண ப்ரவசநம் செய்த ஸ்ரீமான் உ, வே. M. V. ரங்காசாரியர், (B.A., வக்கீல், காஞ்சீபுரம்) ஸ்வாமிக்கு ஒரு தங்கமெடல் (Medal) தயாரானதும் ஸ்ரீ அழகிய சிங்கர் மந்த்ராக்ஷதையுடன் அனுப்பப்படும்.

முகுந்தகிரி. வ. வரததாஸன்,
3—4—50. கார்யதர்சி.

* * * * *

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

1. மாலுகந்தவாசிரியர் மஹோத்ஸவம் :—

12—2—50 விரோதியாண்டு மாசித்திங்கள் முதல் நன்னாள் ஞாயிற்றுக்கிழமை திருவல்லிக்கேணி ரத வீதியிலுள்ள ஸ்ரீ அஹோபிலமடத்தில்“மாலுகந்த வாசியர்”மஹோத்ஸவம் காலை 8-மணிக்கு ஆரம்பமாகியது. “ பாட்டுக்குரிய பழையவர் மூவர்” (“வையகமெண் பொய்கைபூதன் பேயாழ்வார் ”) “ மழிசையர்கோன்,” “ மகிழ்மாறன்,” “ மதுரகவி ” “ பொய்யில் புகழ்க் கோழியர்கோன்,” “ விட்டுசித்தன்,” “ பூங்கோதை,” “ தொண்டரடிப்பொடி,” “ பாணாழ்வார், ” “ அய்யனருட்கலியன் ” என்ற விஷயங்கள் பற்றி முறையே வித்வான்கள் ஜகந்நாதாசாரியர், பந்தல்குடி திருமலை அய்யங்கார், நரஸிம்மாசாரியர், ராமாநுஜாசாரியர், நரஸிம்ஹதாதாசாரியர், வரதாசாரியர், வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார், பி. எஸ். ஸ்ரீநிவாஸ தேசிகாசாரியர், டி. ராமஸ்வாமி அய்யங்கார், திருக்குடந்தை ஸ்ரீநிவாஸ ராகவாசாரியர் உபந்யாஸங்கள் செய்தனர். சங்கத்தின் 24-வது வெளியீடான “ பொய்கையார் மாலை ” அரங்கேற்று விழாவை யொட்டி இம்மஹோத்ஸவம் நடைபெற்றது. இதன் வள்ளல் ஸ்ரீமான் மங்கலம் ராமாநுஜாசாரியர் ஆவர்.

2. ஸ்ரீராமநவமி மஹோத்ஸவம்:—

(26—3—50) ஞாயிற்றுக்கிழமை திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் மாலை 4-மணிக்கு ஸ்ரீராமநவமி மஹோத்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீராமநவமி மஹோத்ஸவம் ஸ்ரீமான். D. ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது. வித்வான்கள் ஜகந்நாதாசாரியர், நரஸிம்ஹ தாதாசார்ரியர் முறையே “கம்பராமன்,” “வான்மீகிராமன் ” என்ற விஷயங்கள்பற்றி மிக விரிவாக அழகாக உபந்யஸித்தார்கள்.

3. கம்பர் திருநாட் கோண்டாட்டம் :—

(2—4—50) ஞாயிற்றுக்கிழமை திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் காலை 8-மணிக்கு “ கம்பர் திருநாட் கொண்டாட்டம் ஆரம்பமாகியது. ஸ்ரீமான் வி. ரங்காசாரியர் அவர்கள் தலைமை வஹித்தார். ‘கம்பன்கண்ட குகன்,” “ கம்பன் வருணனை,” “ கம்பனும் ஆழ்வார்களும்” என்ற விஷயங்கள் பற்றி முறையே வித்வான்கள் கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், கிருஷ்ணமாசாரியர், நரஸிம்மாசாரியர் உபந்யஸித்தார்கள். முற்பகல் விழா 12-மணிக்கு நிறைவெய்தியது. பிற்பகல் விழா 3-30-மணிக்குத் தொடக்கமாகியது. திவான்பஹதூர் என். எஸ். நரஸிம்மாசாரியர் தலைமை வஹித்தார். “கம்பன் கற்பனை ” எனும் விஷயம்பற்றி வித்வான் ஜகந்நாதாசாரியர் அற்புதமாக உபந்யஸித்தார். திருவழுந்தூர் ஸங்கீத வித்வான் ஸ்ரீநிவாஸய்யங்கார் “ கம்ப ராமாயண இன்னிசைப் பாட்டுக் கச்சேரி” நடத்த கொண்டாட்டம் மாலை 6-30-மணிக்கு இனிது நிறைவெய்தியது.

ப. ரே. திருமலை அய்யங்கார்,
3—4—50 கார்யதர்சி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்

[illegible]
[illegible]
[illegible]
[illegible] தஸ்மை நம: ॥

ஸ்ரீமதுராந்தகம் கலாசாலையின் எட்டாவது வார்ஷிக மஹோத்ஸவம்

ஸ்ரீ அழகியசிங்கரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத கலாசாலையின் எட்டாவது வார்ஷிக மஹோத்ஸவம் சென்ற பங்குனி மீ 3வ (16—3—50) வியாழக்கிழமையன்று சென்னை கல்வி மந்திரி கனம் ஸ்ரீ மாதவமேனன் அவர்களின் தலைமையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சென்னை ப்ரஸிடென்ஸி காலேஜில் ஸம்ஸ்க்ருதாத்யாபகராயிருந்தவரும் தத்காலம் அடையார் புஸ்தகசாலை (லைப்ரரி)யில் அதிக்ருதருமான ஸ்ரீ. உப. வே. வித்வான் வெங்கடாத்ரிபுரம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி ஸம்ஸ்க்ருதத்தில் உபந்யாஸத்தைச் செய்தருளினர். பல ப்ரமுகர்கள் வந்திருந்தனர்.

ஸதஸ் ஆரம்பத்தில் ஸ்ரீகார்யம் வித்வான் ஸ்ரீ உ. வே. ஜோ. ரங்காசார்ய ஸ்வாமி ஸ்ரீ அழகிய சிங்கரால் அநுக்ரஹித்து அனுப்பப்பட்ட அநுசாஸந ஸ்ரீமுகத்தை ஸேவித்தார். பிறகு அத்யக்ஷருக்கு ஸம்ஸ்கிருதத்தில் ச்லோக ரூபமாய் வரவேற்பு வாசிக்கப்பட்டது. பின்னர் கலாசாலாத்யக்ஷர் ஸ்ரீ.உவே. தி. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி வருஷாந்தர அறிக்கையைப் படித்தார். மந்திரி கனம் ஸ்ரீ மாதவமேனன் தமது தலைமையுரையில் ஸம்ஸ்க்ருதத்தின் பெருமையை விவரித்து அதை எல்லோரும் உணரவேண்டியது ஆவச்யகமென்றும், ஸம்ஸ்க்ருத வித்வான்கள் ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள நம் பூர்வக்ரந்தங்களில் வாழ்க்கைக்கு வேண்டிய பல அரிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன என்பதை அனைவரும் அறியும் வண்ணம் எடுத்துக்காட்டவேண்டியது அதைவிட ஆவச்யகமென்றும் எல்லோருக்கும் புரியும்படி உபந்யஸித்தார். ஸம்ஸ்க்ருத வித்யாபிவ்ருத்திக்காக ஸ்ரீ அழகிய சிங்கர் இம்மாதிரி ஒரு கலாசாலையை ஏற்படுத்தி அதை நல்லமுறையில் நடத்திவருவதை வெகுவாய் பாராட்டிப்பேசினர்.

ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யஸ்வாமி தமது ஸம்ஸ்க்ருத உபந்யாஸத்தில் ஸம்ஸ்க்ருதம் முற்காலத்தில் ஜனங்களிடையே பேசும் பாஷையாக இருந்து வந்ததென்று மஹாபாஷ்யம் முதலிய க்ரந்தங்களிலிருந்து தெரிகிறதென்றும், இப்போது ப்ரசாரமின்மையால் அதன் ப்ரபாவம் பலருக்குத் தெரியவில்லையென்றும், தர்பி வ்ருத்திக்கு அரசாங்கத்தார் மேலும் ஆதரவு காட்டவேண்டுமென்றும், பாஷாந்தர பாடசாலைகளில் ஸம்ஸ்க்ருதாத்யாபநத்திற்காக ஏற்படுத்தப்பட்ட உபாத்யாயர்களுக்கு இன்னும் ஸௌகர்யம் செய்துகொடுக்க அரசாங்கத்தாரும் அந்தந்த பாடசாலை நிர்வாஹிகளும் முன்வரவேண்டுமென்றும் கூறினர்.

கலாசாலையில் பற்பல பரீக்ஷைகளில் தேர்ச்சிபெற்ற வித்யார்த்திகளுக்கென்று வைக்கப்பட்ட பாரிதோஷிகங்களை மந்திரி கனம் ஸ்ரீ மாதவமேனனின் மனைவியாரான ஸ்ரீமதி குட்டிமாளு அம்மா அவ்வோ வித்யார்த்திகளுக்கு வழங்

கினர். அப்பொழுது அவர் ஸம்ஸ்க்ருதத்தின் பெருமையைப்பற்றிச் செய்த உபந்யாஸம் எல்லோராலும் மிகவும் கொண்டாடப்பட்டது. மந்திரி தம்பதிகளுக்கு ஸம்ஸ்க்ருதத்திலுள்ள ஆர்வமும் அதைப் ப்ரசாரம் செய்வதிலுள்ள ஊக்கமும் அன்று அனைவருக்கும் நன்கு விளங்கின.

இக்கலாசாலை ஏற்பட்டது முதல் அநேகமாக எல்லா வார்ஷிக மஹோத்ஸவங்களுக்கும் எழுந்தருளி தானும் ஆநந்தித்து மற்றவர்களையும் ஆநந்திக்கச் செய்யும் ஸ்ரீமான். உ. வே. ஸ்ரீ தேசிகதர்சன ரத்னதீபம் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி வேறு கார்யவசத்தால் எழுந்தருள முடியாமல்போனது ஒரு குறையாயிருந்தது. அந்தக் குறை அந்த ஸ்வாமியின் குமாரரான ஸ்ரீமான் வி. வி. ராமதுரை ஸபத்நீகராய் வந்திருந்து இவ்வைபவத்தில் கலந்து கொண்டமையால் சற்று தணிந்தது. ஸ்ரீமான். ராமதுரையே இம்மஹோத்ஸவம் இவ்வண்ணம் சிறப்பாக நடைபெற்றதற்கு நிதாநமாயிருந்தவர். '[illegible]' என்ற வார்த்தை மற்றுமொருதரம் மெய்யாயிற்றென்றே அன்று பலருமெண்ணினர்.

நமது சாஸ்த்ரீய வித்யாபிவ்ருத்தியைப் பற்றிப்பேசும்போது ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி சிறந்தனவாயும் அபூர்வமாயுமுள்ள பற்பல யோஜனைகளை ஆப்தர்களிடம் வெளியிடுவதுண்டு. சாஸ்த்ர ப்ரவசநத்தோடு மட்டும் நின்றுவிடாமல் '[illegible]' என்றிவை முதலான ஆத்ம குணங்களின் சிறப்பை நமது சிறுவர்களின் மனத்தில் நன்றாகப் படியும்படி செய்து அக்குணங்களை அவர்கள் எந்நாளும் எக்காரணத்தைக் கொண்டும் கைவிடாமலிருக்கும்படி பழக்கவேண்டுமென்றும், அதற்குத்தக்கபடி குருகுலமுறையில் பாடசாலைகள் இருக்கவேண்டுமென்றும் அவர் அடிக்கடி சொல்வது வழக்கம். ஒரு ஸமயம் அந்த ஸ்வாமி சொன்னதாவது: 'வங்க தேசீய மஹாகவி ரவீந்த்ரநாத் தாகூர் ஏற்படுத்தியுள்ள 'சாந்திநிகேதநம்' என்னும் வித்யாபீடத்தைச் சார்ந்த மாணவகன் ஒருவன் ஒரு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் தான் போகவிரும்பிய ஊருக்கு டிகெட் கொடுக்கும்படி கேட்டு ஒரு பத்து ரூபாய் நோட்டைக்கொடுத்தான். ரயில்வே அதிகாரி அந்தப் பையனின் ஆக்ருதியைப் பார்த்துவிட்டு, அவன் 13-வயதிற்குட்பட்டவனென்று நினைத்துக்கொண்டு அரை டிகெட் ஒன்றைக் கொடுத்துவிட்டு மீதி சில்லரையைக் கொடுக்க ஆரம்பித்தபொழுது பையன் தனக்கு 13 வயதுக்குமேல் ஆய்விட்டதென்று கூறி முழு டிகெட் கொடுக்கும்படிகேட்டு வாங்கிச்சென்றானாம். அவ்வளவு சீரிய முறையில் பையன்களுக்கு ஒழுக்கம் சாந்தி நிகேதநத்தில் போதிக்கப்படுகிறது. இவ்விடங்களிலுள்ள வித்யாசாலைகளிலுள்ள பையன்களில் எவ்வளவுபேர் அப்படிப்பட்ட ஒழுக்கப்பரீக்ஷையில் தேறக் கூடியவர்கள்? வெகு சிலரே என்றுதான் சொல்லவேண்டும். அப்படியில்லாமல் நம் ஸம்ப்ரதாயக் கலாசாலைகள் பழைய குருகுலங்களைப்போல் மாணவர்களுக்கு வித்யை, ஒழுக்கம், பண்பாடு எல்லாவற்றையும் போதிக்கு மிடங்களாக அமையவேண்டும்' என்று.

ஸ்ரீ. வி. வி. ஸ்வாமியின் இந்த உபதேசம் வித்யாப்ரவசநத்தில் ஈடுபட்டவர்களனைவராலும் பின்பற்றப் படவேண்டியதென்பதில் ஸந்தேஹமேயில்லை. கற்றறிந்தபடி தான் நடத்தலும் சிஷ்யர்களை நடப்பித்தலும் ஆசார்ய சப்தார்த்தத்திலடங்கி யிருக்கின்றனவன்றோ! ஸ்ரீ மதுராந்தகம் கலாசாலையில் இதுவிஷயமாய் செய்யப்பட்டுவரும் ஏற்பாடுகள் ஸபலங்களாகி அக்கலாசாலை சாஸ்த்ரீய கலாசாலைகளுக்கு நிதர்சநமாக விளங்கும்படி ஸர்வசரண்யன் அருள் புரிவானென்றே நம்புகிறோம்.

ஸ்ரீ:

புத்தக விமர்சம்

1. ஸ்ரீமத் பகவத் கீதை — இரண்டாம் அத்யாயம். தமிழ் வசனம். ஆசிரியர் P. B. K. ஸ்ரீநிவாஸாசார்யர், ந்யாய வ்யாகரண சிரோமணி. கிடைக்குமிடம்: ஆசிரியர், ஸ்ரீ பாஷ்யகார ஸித்தாந்த வர்த்திநீ ஸம்ஸ்க்ருத பாடசாலை, நெ. 51, நாராயண முதலி தெரு, ஜி. டி., சென்னை: விலை அணு 6.)

இப்புத்தகத்தில் இவ்வாசிரியர் யாவரும் புரிந்து கொள்ளும்படி ஸ்ரீமத் பகவத் கீதையின் 2-ம் அத்யாயத்தை ஸுலபமான தமிழில் விவரித்திருக்கிறார். ஸம்ப்ரதாய ரீதியில் ஸ்ரீமத் பகவத் கீதையின் பொருளை ஸமஸ்கிருத பரிசயமில்லாதவர்கள் தெரிந்து கொள்ள இப்புத்தகம் மிகவும் பயன்படும்.

2. ஸ்ரீ வைஷ்ணவ தினசரி — ஸ்ரீ தேசிக ஸேவாஸமிதி வெளியீடு—5. (கிடைக்குமிடம்: N. S. ராகவன், ஸ்ரீ தேசிக ஸேவாஸமிதி, 11, S. N. செட்டி தெரு, ராயபுரம், சென்னை. விலை அணு 6.)

ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த தமிழ் ப்ரபந்தங்களுள் 'ஸ்ரீ வைஷ்ணவ தினசரி' என்பது ஒன்று. இது 10 பாட்டுகள் கொண்டது. வேதம், ஸம்ருதி, இதிஹாஸம், புராணம், பாஞ்சராத்ரம், பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகள் இவைகளிலிருந்து ஸ்ரீ வைஷ்ணவர்களாயுள்ளவர்கள் தினந்தோறும் செய்ய வேண்டியதாய் நிஷ்கர்ஷிக்கப்பட்ட கார்யங்களை மிகவும் சுருக்கமாயும் அழகாயும் ஸ்வாமி தேசிகன் இப்பாசுரங்களில் காட்டியருளியிருக்கிறார். ஸ்ரீ தேசிக ஸேவா ஸமிதியின் கார்யதர்சியான ஸ்ரீ. உ. வே. நல்லூர் ஸ்ரீநிவாஸ ராகவாசாரிய ஸ்வாமி இப்பிரபந்தத்திற்கு பூர்வ வ்யாக்யானத்தை அனுஸரித்து தெளிவான தமிழுரை ஒன்று எழுதி அத்துடன் வெளியிட்டிருக்கிறார். ஸ்ரீ வைஷ்ணவர்களனைவரும் படித்துப் பயனுறுவர்களென்று நம்புகிறோம்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா வரவு: 1950 ஞு மார்ச் மாதம்

சந்தா நெ.		பெயரும் விலாஸமும்.	வர்ஷம்	தொகை.
8	ஸ்ரீ	S. ராகவாசாரியர், தாதர், பம்பாய்	50	3
25	,,	T. K. ராமஸ்வாமி ஐயங்கார் ,,	,,	3
26	,,	V. V. ஐயங்கார், மதுங்கா	,,	3
47	,,	S. வரதாசாரியர், தாதர்	,,	3
75	,,	T. S. நரஸிம்மாசாரியர், தர்மபுரம்	,,	3
95	,,	A. S. ஸௌம்யநாராயணாசாரியார், ஸ்ரீரங்கம்	,,	3
134	,,	A. V. கோபாலாசாரியர், திருச்சி	,,	3
193	,,	T. R. ராஜகோபாலய்யங்கார், கும்பகோணம்	50, 51	6
393	,,	Dewan Bahadur S. ராகவய்யங்கார், ஸ்ரீரங்கம்	50	3
464	,,	A. வெங்கடாசாரியார், நாகபுரி	,,	3
468	,,	M. C. துரைராஜன், சென்னை	48	3
623	,,	சேட்லூர் N. R. ராஜகோபாலாசாரியர். பொள்ளாச்சி	50	3
649	,,	A. V. வானமாமலாசாரியர், திருவனந்தபுரம்	,,	3
651	,,	கிருஷ்ண ஸபா, மதுங்கா. பம்பாய்	50, 51	6
658	,,	M. R. சாரி, கல்கத்தா	49, 50	6
659	,,	K. S. கோபாலன், சென்னை	50	3
676	,,	K. S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், தஞ்சை	,,	3
711	,,	S. A. ஸ்ரீனிவாஸன், கர்ணம், மல்லபுரம்	49	3
727	,,	T. N. தாதாசாரியர், சாமராஜேந்திராபெட், பெங்களூர்	50	3
755	,,	G. K. ராமஸ்வாமி, புதுடெல்லி	,,	3

சந்தா நெ.		பெயரும் விலாஸமும்.			வர்ஷம்	தொகை.
767	,,	T. ராஜகோபாலாசாரியார், திருவஹீந்த்ரபுரம்			49	3
775	,,	P. R. கோபாலஸ்வாமி ஐயங்கார், பஞ்சமாதேவி			50	3
779	,,	K. R. ஸௌம்யநாராயணாசாரியர், கும்பகோணம்			,,	3
784	,,	S. திருமலை ஐயங்கார், செம்பூர்			,,	3
941	,,	R. ராஜகோபாலன்,	கல்யாண்		,,	3
942	,,	V. P. சாரங்கன்,	,,		,,	3
943	,,	K. ஸ்ரீனிவாஸன்	,,		,,	3
944	,,	S. ராஜாமணி,	,,		,,	3
945	,,	K. ஸ்ரீனிவாஸன்	,,		,,	3
946	,,	T. S. ராமானுஜம்	,,		,,	3
947	,,	S. S. கோபாலன்	,,		,,	3
948	,,	V. S நரஸிம்மாசாரி	,,		,,	3
949	,,	S. திருமலை	,,		,,	3
950	,,	M. P, ராகவன்	,,		,,	3
951	,,	S. கிருஷ்ணஸ்வாமி	,,		,,	3
952	,,	N. V. ஜகந்நாதன்	,,		,,	3
953	,,	K. ஸம்பத் ஐயங்கார்	,,		,,	3
954	,,	R. ஸம்பத் ஐயங்கார்	,,		,,	3
955	,,	V. ராஜகோபால்	,,		,,	3
956	,,	S. V. ராஜன்	,,		,,	3
957	ஸ்ரீமதி	மதுரம்மாள்	,,		,,	3
960	ஸ்ரீ	T. ராமானுஜாசாரி, பம்பாய்			,,	3
961	,,	N. கஸ்தூரிரங்கன், மதுங்கா			,,	3
962	,,	A. K. சடகோபன்,	,,		,,	3
963	,,	T. K. ஸ்ரீனிவாஸன், M. Sc, செம்பூர், பம்பாய்			,,	3
964	,,	K. S. ராஜன்,	,,	,,	,,	3
965	,,	A. ராமபத்ரன்,	,,	,,	,,	3
966	,,	A. கிருஷ்ணஸ்வாமி	,,	,,	,,	3
967	,,	N. ராஜகோபால்	,,	,,	,,	3
968	,,	K. ராஜம் ஐயங்கார்,	,,	,,	,,	3
969	,,	N. ராமஸ்வாமி,	,,	,,	,,	3
970	,,	Dewan Bahadur R. வரதாசாரியர், B. A. J. P. பம்பாய்			,,	3
971	,,	K. கோபாலஸ்வாமி, B. A., பம்பாய்			,,	3
972	,,	S. ஜகந்நாதன் I. C. S. பம்பாய்			,,	3
973	,,	T. வாஸுதேவாசாரியர், மதுங்கா			,,	3
974	,,	S. சுந்தரராஜன், மதுங்கா			,,	3
975	,,	P. T. K. ஐயங்கார், ,,			,,	3
976	,,	N. S. V. ஐயங்கார், பம்பாய்			,,	3
977	,,	V. N. ஐயங்கார், மதுங்கா			,,	3
978	,,	P. N. T. சாரி,	பம்பாய்		,,	3
979	,,	Poof K. V. ராமானுஜம், பம்பாய்			,,	3
981	,,	M. S. R. ஐயங்கார், மதுங்கா			,,	3
982	,,	M. பத்மனபன், கட்வால்			,,	3
					மொத்தம் ரூ.	198